
மாரியம்மன் துணை

# தோத்திர முத்து



அமரர்

## திருமதி தங்கமுத்து விநாயகமூர்த்தி

அவர்களின் சிவப்பேறெய்தியமை குறித்த


## நினைவு மலர்

11.11.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சமர்ப்பணம்

தங்கத்தை பெயரில் வைத்து நீரின்
தண்மையை நெஞ்சில் கொண்டு
அங்கமெல்லாம் பொறுமை பூண்டு
அன்புற்று வாழ்ந்தீர். தினமும்
தங்கிடும் சாந்தம் அன்பு
தளர்வற்ற பேச்சு யாவும்
உங்களில் கண்டோம் அம்மா
உண்மை உமக்கீடார் இல்லை.

திங்களாய் வயது எண்பத்தாறு
தரித்து இவ்வுலகந்தன்னில்
பங்கமில்லா வாழ்க்கை வாழ்ந்து
பக்குவம் காத்தீர்- தினமும்
எங்களில் பாசம் பகிரவும்
எளிமையில் குடும்பப் பொலிவும்
உங்களில் கண்டோம் அம்மா
உம் நினைவில் இந்நூல் சமர்ப்பணம்

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



மலர்வு
06.06.1928

உதிர்வு
12.10.2014

அமரர்

# திருமதி. தங்கமுத்து விநாயகமூர்த்தி

## திதி வெண்பா

நிகழும் ஜயவருடம் சேர்ந்ததொரு கன்னியிலே
திகழும் அபரபக்க பஞ்சமியே - புகழ்மிக்க
தங்கமுத்து என்னும் குலவிளக்கு எமைவிட்டு
சங்கரனைச் சேர்ந்த தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. விநாயகமூர்த்தி, தங்கமுத்து அவர்களின் வாழ்க்கை குறிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள முத்துக்குழிக்கும் மூதூர் பிரதேசத்தில் அமைந்த மேன்காமம் என்னும் செல்வம் கொழிக்கும் விவசாயக் கிராமத்தில் காலஞ்சென்ற திரு, திருமதி. கனபதிபிள்ளை, பசுபதி பிள்ளை தம்பதியினரின் செல்வப் புதல்வியாய் 1928 ஆம் ஆண்டு பிறந்தவர் தங்கமுத்து ஆவார். அவர் கிளிவெட்டியை பிறப்பிடமாகவும், அன்றைய காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த செல்வந்தர்களில் ஒருவருமான திரு. முருகப்பர் பூபாலபிள்ளை அவர்களின் ஒரேயொரு மகனான திரு. பூபால பிள்ளை விநாயகமூர்த்தி கிராமசபைத் தலைவர் என்பவரை 1944 ஆம் ஆண்டு திருமணம் செய்து அவரின் இன்பமான வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று ஆறு செல்வங்களைப் பெற்றெடுத்தார். அதற்கமைய பரமேஸ்வரி பாக்கியத்துரை தாயகத்திலும், இராஜராஜேஸ்வரி குமாரதுரை டென்மார்க்கிலும் நிர்மலாதேவி தாயனந்தகுரு தாயகத்திலும், தவகுமார் விநாயகமூர்த்தி தாயகத்திலும், பரிமளாதேவி நாகேந்திரம் பிரித்தானியாவிலும், ஜெயக்குமார் விநாயகமூர்த்தி தற்சமயம் பிரித்தானியாவிலும் தமது வாழ்க்கையை அமைத்துள்ளனர்.

அன்னாரின் உடற்பிறப்பாய் ஒரேயொரு மூத்த அன்புச் சகோதரனாய் வைரமுத்து கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த நிலையில் அவரும் 07.07.1986 ஆம் ஆண்டு இறைவனடி எய்தினார்.

அமரர்.தங்கமுத்து அவர்கள் தமது பிள்ளைகளுடன் மட்டுமன்றி பேரப்பிள்ளைகளுடன், பூட்டப்பிள்ளைகளுடனும் அளவிலா அன்பினைச் செலுத்தி தாய்க்கு தாயாக தனது வாழ்க்கையினை வாழ்ந்தாரென்றால் அது மிகையாகாது. அன்னாரின் அன்புக் கணவரான திரு. பூபாலபிள்ளை விநாயகமூர்த்தி அவர்கள் 1992 ஆம் ஆண்டு இறைவனடி எய்தியதனால் 1997 ஆம் ஆண்டு தனது இரண்டாவது மகளான இராஜராஜேஸ்வரி குமாரதுரை அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய டென்மார்க் நாட்டிற்கு வருகை தந்திருந்தார். அன்னார் டென்மார்க் வந்து நான்கு வருடங்களின் பின்னர் அவருக்கு இந்நாட்டில் நிரந்தர வதிவிட உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. அந்த வாய்ப்பினை பயன்படுத்தி பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த தனது இளைய மகனான ஜெயக்குமார் குடும்பத்தினருடனும், லண்டனில் வாழ்ந்த இளைய மகளான பரிமளாதேவி நாகேந்திரம் குடும்பத்தினருடனும், தமது பேத்தியான ரூபவதனி தவக்குமார் குடும்பத்தினருடனும் அங்கு சென்று வாழ்ந்ததில் அவருக்கு பெரும் மகிழ்ச்சி கிடைத்தது. அத்துடன் அடிக்கடி தாய் நாட்டிற்குச் சென்று வருவதற்கான வாய்ப்பினையும் பெற்றதற்கமைய அவரின் வாழ்க்கை மிக மகிழ்ச்சியாக அமைந்ததெனலாம்.

இக் காலப்பகுதியில் மிகவும் ஆரோக்கியமான உடல் நலத்துடன் வாழ்ந்த அவர் திடீரென சுகயீனமுற்ற நிலையில் அவரை வீட்டில் வைத்து பராமரிக்க முடியாதென வைத்திய அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கமைய அவர் வயோதிபர்களை பராமரிக்கும் இல்லத்திற்கு 2013 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 இந் திகதி சேர்க்கப்பட்டார். அங்கும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டார். இந்நிலையில் தனது பேரப்பிள்ளைகள் மூவர் மனோ வனஜா குடும்பம், மதி கவி குடும்பம், வதனன் கவிதா குடும்பம் ஆகியோர் வாழும் விபோ நகரத்துக்கு தம்மை அழைத்துச்செல்லுமாறு விடுத்த வேண்டுகோளுக்கமைய அவரும் அவரது மகள் இராஜராஜேஸ்வரி குமாரதுரை குடும்பத்தாரும் இடம்பெயர்ந்தோம்.

இங்குள்ள வயோதிப வைத்திய மையத்தில் கடமை புரிந்த டெனிஸ் பராமரிப்பாளர்கள் நன்கு கவனித்தனர். அத்துடன் எங்களின் வீடும் அருகாமையில் அமைந்திருந்தமையால் நாமும் அடிக்கடி சென்று நன்கு கவனிப்பதற்கான வாய்ப்புகள் கிடைத்தன இந்நிலையிலேயே திடீரென அவர் ஐப்பசி மாதம் இறைவனடி சேர்ந்தார்.

- **மருமகன் குமாரதுரை அருணாச்சலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் ஆத்மாவின் வெளிப்பாடு

சிவபூமி எனச் சிறப்பிக்கப்பட்ட இலங்கைத் தீவில் பாடல் பெற்ற தலம் திருக்கோணேசன் விளங்கும் திருகோணமலையில் மூதூர் நகரின் ஒரு கிராமம் தான் கிளிவெட்டி, கிளிவெட்டியிலே சகல இயற்கை வளங்களுடன் ஓஹோ என வாழ்ந்தவர் தான் என் அம்மா தங்கமுத்து. அழகான பெண் வேண்டுமென்று பெண் பார்ப்பதற்கு குதிரை மேல் ஏறி வந்து மாப்பிள்ளையா என் அப்பா என் அம்மாவைப் பார்த்துத் திருமணம் செய்தார்.

என் தாயார் பெயருக்கேற்ப தங்கமானவர். அழகுக்கு அழகு சேர்ந்தவர் போல் என் அப்பாவும் (விநாயகமூர்த்தி) இணைந்து இனிமையும் இன்பமும் கூடியவாறு இல்லறம் நடத்தினர். அன்னமிட்ட கை என் அம்மாவின் கை. என்னை விசேடங்கள் என்றாலும் அனைவருக்கும் சலிக்காமல் அன்னமிடுவாள். என் அம்மா வசதிகளும் அப்படி, வாழ்க்கையில் எந்தக் குறைவையும் இல்லை. அடுப்படி வேலை யெல்லாம் அத்துப்படி அம்மாவுக்கு.

அமைதி பொருந்திய சீதேவி என் அம்மா. அடுத்தவருக்கு எந்தத் தொந்தரவும் இல்லாது வாழ்ந்தவர் அடிப்பேன் என்று வாயால் தான் சொல்வார். அடித்தறிய மாட்டார், எங்களுடைய பிள்ளைத் தொல்லைகளையெல்லாம் பொறுத்து எங்களை வளர்த்தார். தங்கமுத்து என்று அம்மாவை பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் எதுவும் பேசாமல் சிரிப்புடனேயே இருப்பாள் அம்மா.

ஆறு பிள்ளைகளைப் பெற்று எண்பத்தாறு வயது வரை வாழ்ந்தார். இத்தனையும் வாழ்ந்தது போதும் என்று தான் அம்மாவை நோயில் பாய் படுக்கைகள் பராமல் சலிக்காமல் காலன் உயிரை எடுத்தானோ தெரியாது..

எந்நாளுமே சிரிப்புடன் வாழ்ந்த அம்மா நீங்கள் நோயுற்றதை அறிந்து தங்களை தேவியும், தம்பி தவகுமாரும் நானும் டென்மார்க் வந்து நேரில் பார்த்த போது அன்று எங்களைக் கண்டு அழுததை இன்று நினைக்கையிலும் வேதனையாக இருக்கிறது. என் அம்மா அன்று என்னுடன் பேசவில்லை.. கண்களிரண்டிலும் கண்ணீர் தான் கசிந்தது. அம்மா என் அம்மா நீ பணக்காரி மட்டுமல்ல பாக்கியசாலி உன் கண்ணோடே பேரப்பிள்ளைகளையும் பூட்டப்பிள்ளைகளையும் கண்டுவிட்டாய். ஆம், அம்மா நீ மறைந்தாலும் உம் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் வாழும். இது உன் மகளின் ஆத்ம வெளிப்பாடு.

ஆத்மா சாந்தியடையவதாக
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

- திருமதி. பரமெஸ்வரி பாக்கியதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் தந்தையாரின் உடன்பிறந்த சகோதரரான செல்வந்தர் முருகப்பர் பூபாலபிள்ளையும், அவரது மனைவியுமான பூபாலபிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களும் எங்களுடன் மிகவும் பாசமாகவும், நேசமாகவும் வாழ்ந்தனர், அவர்களின் ஒரே மகனான அமரர் பூபாலபிள்ளை விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியான அமரர் விநாயகமூர்த்தி தங்கமுத்து அவர்களின் மறைவுச் செய்தியினைக் கேள்வியுற்றதும் நான் ஆழ்ந்த அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன். அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் எமக்குமிடையிலான கடந்தகால உறவுகளை நினைக்கும்போது அதனை நாம் எவ்வகையிலும் மறக்கமுடியாத மன வேதனையினை ஏற்படுத்தியுள்ளது.

எனது சகோதரரான அமரர் திரு விநாயகமூர்த்தி அவர்களின் மறைவினைத் தொடர்ந்து தனிமை என்னும் உணர்வால் வேதனையிலிருந்த திருமதி வினாயகமூர்த்தி தங்கமுத்து அவர்களை அவரின் இரண்டாவது மகளான ராஜராஜேஸ்வரி குமாரதுரை அவர்கள் தாம் வாழும் நாடான டென்மார்க்கிற்கு அழைத்து அங்கு அவர் பராமரித்துவந்தார். இந்நிலையில் அடிக்கடி தாய் நாட்டிற்கு வருகைதரக்கூடிய வாய்ப்பினைப் பெற்ற அவர் இங்கு வரும்போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வருகைதந்து எங்களை மகிழ்விப்பது அவரின் வழமையான நிகழ்வாக இருந்தது.

எங்களுடன் பாசமாக இருந்த பெரியப்பாவும், பெரியம்மாவும் காலமானதைத் தொடர்ந்து எனது அண்ணருக்கும், மச்சாளுக்குமிடையில் எம்முடனிருந்த உறவு நெருக்கமடைந்தது. இந்நிலையிலேயே ஆறுதல் தந்திருந்த அண்ணரும், மச்சாளும் எங்களைவிட்டு பிரிந்தமை எமக்கு மீண்டும் வேதனையை தந்துள்ளதுடன் இந்த கிளிகள் இரண்டும் எங்கே சென்றனவையோ நாம் அறியோமே இறைவா, இவர்களை இப்பிறவியில் இனிக்காண முடியுமா இறைவா!

உங்கள் பிரிவால் வாடும்
நாகேஸ்வரசிங்கம் (மாசிலாமணி)
கிளிவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**My dear granny**

I remember you fed me and
how much you love me
and how much illove you.
you are my best granny in my life
, who I loved you so much
. i wonted to stay with you all the time,
but Ihad to go away from you
and now you are dead and still now ,
I am not with you
but you will be always in my heart.
you are so very caring so loving ,
so kind and evry time with me,
you played big part in my life
love you always granny
rest in peace
love you and
I miss you

**Abishek kulanthiran**
**7 years UK**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எப்போது வருவாயென ஏங்குகிறேன்....மாமியே!
அமரரான எனது சேமன் மாமி தங்கமுத்துவிற்கு இக்கவிதை சமர்ப்பணம்....
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

நீங்கள் அமரரான செய்தி கேட்டு, மழை பெய்த களிமண் நிலம்போல் மனம் நெகிழ்ந்து ஒடுங்கியது ஒரு கணம். மாமனார் விநாயகமூர்த்தியை மணம் முடித்து சேமன் மாமியாய் சிந்தனையிலே விருந்தளித்தாய்...கடைசியில்
காலன் செய்த சதியால், காட்சியின்றி கண்மூடி கிடக்கின்றாயே!
ஸ்ரீலங்கா, பிரான்ஸ், லண்டன், டென்மார்க் என எத்தனை முறை வலம் வந்தாய்...பிடிக்கவில்லையே அவனுக்கு பலவந்தமாய் பறித்து விட்டானே அந்த ஆண்டவன். முகத்திலே எப்போதும் சிரிப்பு, அகத்திலே எப்போதும் மலர்ச்சி எழிமையாய் பேசி, இனிமையாய்ப் பழகி எல்லோர் இதயத்திலும் இடம் பிடித்துவிட்டு
ஏன் எங்களை விட்டு பிரிந்து சென்றாய்? நீ இல்லாத இடம் நிர்க்கதியாய் கிடக்கின்றதே; நீ எப்போது வருவாய். கண்டதும் சிரித்திடுவாய், ஏன்! கடுகளவேனும் கோபம் வராதா உங்களுக்கு
கிளிவெட்டியில் வாழ்ந்த காலம், அது ஒரு பொற்காலம்
அடிக்கடி விருந்தினர் வருவார்கள் அமரர் சேமனாரைத் தேடி
ஆக்கி, ஆக்கி அலுக்காத கைகள், சோறு ஆக்கி,ஆக்கி அலுக்காத கைகள் அது. நான் சிறுவனாய் இருக்கும் காலத்தில் எனக்கோர் ஞாபகம் உங்களுக்குள்ளே உருவானது ஓர் குழு
நீங்கள் எங்கு நிற்கின்றீர்களோ அங்கு ராசமணியையும், ராசம்மாவையும் வேவியையும், வள்ளிப்பிள்ளையையும் காணலாம்
வம்மியடித் திடலுக்கு வாருவப் புல் அறுக்கச் சென்றாலும்
கலியாண வீட்டினிலே கலகலப்பாய் சமைப்பதென்றாலும்
நீங்கள் இல்லாமல் இவர்கள் இல்லை.
இன்று அது நிழலாக என் கண்முன்னே காட்சி தருகின்றதே ...மாமியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன் மக்களைப் பெற்று நற்கதி அடைந்தாய் கண்ட்டீர்கள் 28 பேரர்களை, கொண்டீர்கள் இதயத்துள் 23 பூட்டர்களை
கொள்ளுப் பேரர்களைக் காண கொடுத்து வைக்க வில்லையே உனக்கு நோய் தாக்கி வாய் திறக்கா நேரத்திலும், என்னைக் கண்டதும் எங்கிருந்து வந்ததோ அந்த உற்சாகம் பத்து விரலையும் பக்கத்திலே நீட்டிடுவாய், சொத்தாக நான் அதனை எற்று நறுக்கிடுவேன் நன்கு வளர்ந்த அந்த நகத்தை இனி எப்போது தருவாய் உன் நகத்தை நான்நறுக்க வேண்டுகின்றேன் இறைவனை, உங்கள் ஆத்ம சாந்திக்காக உங்கள் பிரிவால் துயருறும்

கணேஸ் சுப்பிரமணியம் குடும்பத்தினர் Denmark

## சிவயோகர் சுவாமிகள் கூறும் யோகம்

தவத்திலே மேம்பட்டவர்களை கூட இந்தியர்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்குச் சிவத்தியானஞ் செய்க. அதனால் மாத்திரந்தான் புலன்களைத் தன்வசப்படுத்தத்தக்கது. ஆகவே இடைவிடாமற் சிவத்தியானஞ் செய். மனிதன் விடயங்களைக் கருதும் போதெல்லாம் பற்றுண்டாகிறது. பற்றுதலால் விருப்பம் உண்டாகிறது. விருபற்பத்தாற் சினம் பிறக்கிறது. சினத்தால் மயக்கம். அம்மயக்கத்தால் தவறுதல் உண்டாகும். ஆதலால் உன்னைச் சிவத்தியானத்தால் காத்துகொள்.

நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பழிந்து தரும வழியினின்று தவறுகிறோம். தவறுதல் நீங்கித் திட முண்டாகச் சிவத்தியானமே சிறந்த கருவியாகும். இந்த உலகத்தில் மிகுந்த செல்வமிருப்பினும், வானோரை ஏவல் கொள்ளக்கூடிய வல்லமையிருப்பினும் நாங்கள் புலன்களை அடக்கியாளுதல் முடியாது. ஆதலால் திருவருளை முன்னிட்டு மனதைப் புலன்வழிச் செல்லாமல் அடக்கியாள். இது தான் தவமென்று பெரியார் சொல்வர். அதைவிடுத்து இடம்பமான வேள்வி முதலியவை செய்வதால் திடமுண்டாகமாட்டாது. நான் உமக்குத் தரக்கூடிய முதுசொம் "எந்நேரமும் கடவுள் உம்முடனிருக்கிறார்" என்னும் உறுதிமொழியே. ஒரு குறையுமில்லை (you are wel balanced) "உன்னிடத்தில் எல்லாம் ஒடுக்கிய நிலையில் உள்ளது அதை நீ வெளிக்கொண்டவர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kære rare Paati

Selvom jeg ikke kunne tale tamilsk med dig syntes jeg at du var sød. Fordi når du smiler, ser du sød ud. Du er også blød. Jeg elskede de kram du gav mig, de var rare. Du grinede altid rigtig meget når jeg lavede sjove grimasser foran dig, og nogen måtte bede mig om at stoppe. Jeg glemmer aldrig de bolsjer du altid gav mig. De var turkis grønne og rektangulære. Og der var skrevet med guld på dem. Det smagte friskt og stærkt.

- Arunan 6 år.

---

Kære søde Paati,

Jeg var glad for at komme hjem til dig. Og selvom min kunnen i det tamilske sprog ikke var tilstrækkelig var det stadig hyggeligt og dejligt at være hjemme hos dig.Jeg synes at dine brune og små vaipan var rigtig gode. Dine fristende vaipans var en fryd for øjet.

Du kunne rigtig godt lide os oldebørn, og jeg kunne ikke have ønsket mig en bedre oldemor end dig.

Paati det har været dejligt og være hjemme hos dig pga. din varme og store kærlighed til os oldebørn.

- Med store vemodige hilsner fraRamanan Manmathan

---

Kære Paati,

Jeg er glad for at du tænkte på mig, da du lavede kartoffel-porrial til mig,der jeg besøgte Appamma.

Og det var også hyggeligt at se film sammen med dig der du boede hjemme hos Appamma.

Da du ikke kunne tale var jeg glad for at du kunne grine, jeg blev glad når du grinte.

Jeg syntes også det var synd for dig da du ikke kunne tale, og du skulle have mad igennem maven.

Jeg håber du har det godt der hvor du er nu søde og rare Paati.



- Abirami Manmathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DearPaati,

When I think of you, a lot of memories float through my mind.

I still have the photo of you holding me when I was a newborn baby. It wakes a lot of warm and happy feelings inside me. Ohh I miss you Paati. You always wished that I lived with you. You liked to have me near you, and Paati where are you now?

I remember the delicious Tamil food you cooked for me.

I remember all the stories you told me about yourself and about your life in Sri Lanka.

I remember the times we watched Tamil movies together

I remember the walks we used to go outside your apartment

Oh I do miss those days, and I will treasure all these delightful memories in my heart, right where you are too, my dearest Paati.

\- Kasthuri Manmathan

கதிர்காயும் வயல் வெளியும் கயல்கள் சூழ்ந்து
காட்சி தரும் மணியாறும் கலந்து நிற்க
விதியாக நெற்கதிரைக் கிளிகள் கொய்ய
விளைந்த பெயர் கிளிவெட்டி என்று மேவ
துதிபாடும் பாட்டு வாளிப் பெரியோனாலே
துயர் துடைக்க வேம்பின் கீழ் அமர்ந்தாயே
கதியாக உன்பாதம் துதிர்பேனம்மா - எங்கள்
கார்தங்கும் கிளிவெட்டி மாரித்தாயே

\- கிளிவெட்டி மாரியம்மன் பத்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு நிறைந்த அம்மம்மாவே

தங்கம் போன்ற குணமும், முத்து போன்ற சிரிப்பும் சேர்ந்த எனது மதிப்பிற்குரிய தங்கமுத்து அம்மம்மாவே, நீங்கள் எனது கணவனாரின் அம்மம்மாவாக இருந்தாலும் உங்கள் அளவு கடந்த அன்பை எனக்கும் தந்து உங்களை அம்மம்மா என்று வாயார அழைக்க 16 வருடங்கள் வாய்ப்பளித்தீர்களே.......

பணத்தைவிட பிள்ளைச் செல்வத்தையே உயர்வாக மதிக்கும் எனது அம்மம்மாவிற்கு கடவுள் கொடுத்த வரம் ஆறு பிள்ளைகள், இருபத்தாறு பேரப்பிள்ளைகள்,

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற முது மொழிக்கு நீங்களே ஓர் எடுத்துக்காட்டு சுகயீனமாக இருந்த வேளையில் உங்களைப் பரிசோதிக்க வந்த வைத்தியர்களும், தாதியார்களும் உங்களது இளமையான தோற்றத்தையும், பொன்னான சிரிப்பையும், அழகான கூந்தலையும் கண்டு ஆச்சரியப்பட வைத்தீர்களே.

அம்மம்மா, உங்கள் இரு கரங்களும் பொன் கரங்கள். யார், யாருக்கு என்ன உணவு விருப்பமோ அதை அவர்கள் வீட்டிற்கு வருமுன்னரே சமைத்து வைத்து அவர்களின் வரைவை ஆவலுடன் எதிர்ப்பார்ப்பீர்களே!

அன்பின் மறு உருவம் கொண்ட என் அம்மம்மா நீங்கள் அன்பிலே பிறந்தீர்கள், அன்பையே எல்லோருக்கும் வாரி வழங்கினீர்கள்...... அதன் வழியே வாழ்ந்து இறையடி சேர்ந்தீர்கள்.


அம்மம்மாவின் ஆத்மா சாந்தி அடையட்டும்!

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

உங்கள் பிரிவால் வாடும் பேரன் மன்மதன், துணைவி காயத்திரி (பேத்தி) பூட்டப்பிள்ளைகள் கஸ்தூரி, ரமணன், அபிராமி, அருணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



dear ammamma,

i'll always remember you
for your smiling face
for your love and caring

you have a good heart
and a strong will
fighting through your illness
to get back on your feet

lying in your bed
you still wanted to make me food
always loving and caring
i'll never forget

you told me that ammappa
have called you in your dreams
you will take care of each other now
thank you for taking care of us

your grandson
Preman

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டியின் எண்பதாவது பிறந்த நாள் (06.06.2008) அன்று டென்மார்க் பூட்டபிள்ளைகள் பாடிய பாட்டு

பாட்டி எங்கள் பாட்டி, அருமையான பாட்டி தங்கம் போன்ற குணமும் முத்துப் போன்ற சிரிப்பும், சேர்ந்த எங்கள் தங்கமுத்துப் பாட்டி

பிரதீப் :
பாட்டி நல்ல பாட்டி இஞ்சி தேநீர் தந்து ஊக்கம் தரும் பாட்டி

ரமணன் :
பாட்டி நல்ல பாட்டி வார்ப்பன் சுட்டுத்தரும் அருமையான பாட்டி

பிரவீன் :
பாட்டி நல்ல பாட்டி பழைய கதைகள் கூறி மகிழ வைக்கும் பாட்டி

கஸ்தூரி :
பாட்டி நல்ல பாட்டி பாண்டி விளையாட்டை சொல்லித் தந்த பாட்டி

ரெனேஸ், அபிராமி :
பாட்டி எங்கள் பாட்டி, முத்தம் தந்து எம்மை சிரிக்க வைக்கும் பாட்டி
பாட்டி எங்கள் பாட்டி என்பது வயதைக் கொண்டாடும் இனிமை சிரிப்புக்கொண்ட அருமையான பாட்டி

வாழ்க, வாழ்க, வாழ்க வாழ்க எங்கள் பாட்டி என்று வாழ்த்த வந்தோம். டென்மார்க் பூட்டப் பிள்ளைகள், இங்கு ஒன்று கூடி
டென்மார்க் பூட்டப் பிள்ளைகள்
பிரவீன் , பிரதீப், கஸ்தூரி, ரமணன், ரெனேஸ், அபிராமி, அருணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

எழில் மிகு ஈழத்திருநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமான திருகோணேஸ்வரத்தின் கண்ணே, மகாவலி கங்கை கிளைகள் கரைபுரண்டோடி வளம் பல சேர்க்கும் வயல் நிலமும், வண்ண மலர்த் தோட்டமும் நிறைந்த, செல்வச் சிறப்பு மிக்க கிளிவெட்டி என்னும் பதியின் கண்ணே அன்புக் கணவனாம் பூபாலப்பிள்ளை, விநாயகமூர்த்தியின் இனிய கரம் பற்றி இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து, அழகான நான்கு பெண்களையும், ஆஸ்திக்கென இரு குமாரர்களையும், ஈன்று எடுத்தாள் இந்த மங்கை நல்லாள் தங்கமுத்து தாய்,

இவள் பெயருக்கு ஏற்பவே நற்குணங்கள் கொண்டவள். என்ன குறைகள் வீட்டில் இருந்தாலும் வெளியில் காட்டாது கிடைக்கும் பொருளைக்கொண்டு உணவு சமைத்து வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு பசியென்று கேட்கும் முன்னே புசி என்று வயிரார உணவு அளிப்பாய். எப்போது பார்த்தாலும் இவர் வீட்டிலும், முற்றத்திலும் விருந்தாளிகளை காணலாம். மனம் கோணாது யார் வந்தாலும் விருந்தளிப்பாள். இவளது அடுப்பங்கரையோ ஒருநாளும் ஓய்ந்ததில்லை...... கொண்டவருக்கு எது பிடிக்கும், குழந்தைகளுக்கு எது பிடிக்கும், நம்பி வந்த மாப்பிளையருக்கு எது பிடிக்கும் என அறிந்த வகை, வகையாய் அறுசுவை விருந்தளிப்பாள். தன் வீட்டிற்கு வந்த மருமக்களையும், தன் மக்களாக ஏற்றுக் கொண்டு இன்பமாக வாழ்ந்தால் தன் கனவன் எவ்வழி தானும் அவ்வழி என்று சூரியன் செல்லும் திசையிலே சூரிய காந்தியாய் வாழ்ந்து காட்டினார்.

ஏழையென்றும், அடிமையென்றும் எவரும் இல்லை நாட்டிலே என்பது போல் உயர்வு, தாழ்வு கருதாது அடி மட்ட ஏழைமுதல் அரசியல்வாதி வரை அன்போடு விருந்திட்டாள். இந்த அன்னபூரணி வந்த விருந்தோம்பில், வரு விருந்து காத்திருப்பாள். திரு. வள்ளுவரின் குறளுக்கேற்ப வாழ்ந்து காட்டிய மாது இவள், அன்பெனும் கோலூன்றி அறம் எனும் பொருள் கொண்டு இல்லறத்தை நல்லறமாக்கிக் கொண்டு கிராம சபைத் தலைவர். தன் கணவர் பெயரை கிரமமாய் காத்திட்ட மங்கையர் திலகம். இதே போல தனது உறவுகளையும் பத்திரமாய் பேணி வைத்த உத்தமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப் பதினைந்து தென்னை மரங்கள் பக்கத்தில் தென்றல் வீச முத்துச் சுடர்போல நிழா ஒளி முற்றத்தில் வீச குறையேதுமின்றி கவலையின்றி வாழ்ந்து பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என சந்ததி வளர்ந்த போதிலும் தன் குணங்களில் எந்த மாற்றமும் இன்றி பொறுமை எனும் நகையணிந்து எல்லோருக்கும் தாயாய் இன்பமாய் வாழ்ந்தாள்.

நாட்டுப் பிரச்சினை உருவாகி, உறவுகள் நாலா பக்கமும் சென்றாலும் இலங்கை என்றும், டென்மார்க் என்றும் இங்கிலாந்து என்றும் நோர்வே என்றும் கனடா என்றும் அவுஸ்திரேலியா என்றும் உலக நாடுகளில் சொந்தங்கள் விரிந்து இன்னமும் வளர்ந்தது.

வெள்ளத் தனையது நீர் மட்டம் அவர் தம் உள்ளத்தனையது வாழ்க்கை என்பதுபோல நீர்வந்து சேரச் சேர அது அகன்று, பரந்து செல்வது போல அவளது விசாலமான மனம்போல வாழ்க்கையும் இன்பமாய் அமைந்தது. கோபமில்லை, சலிப்பில்லை கொஞ்சமேனும் கபடமில்லை எப்போதும் திருமகள்போல் இன்பமாய் காட்சியளிப்பாள்.

மாதர் சங்கத் தலைவி, பட்டதாரி, மொழிபெயர்பாளி, பதிவாளர், வைத்தியர்கள், பத்திரிகை நிருபர், வங்கிக் கணக்காளர், ஆசிரியைகள், காலமின்றிச் சேவை செய்யும் ஆலோசகர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக மூதூரின் முடிசூடா மன்னர்கள் உந்தன் மருமக்கள் இவை அனைத்தையும் பெற்ற உந்தனுக்கு வாழ்வில் என்ன குறை உனக்கு அறுவர் பிள்ளைகள் இல்லை தாயே, ஆயிரம், ஆயிரம் பிள்ளைகள் ஏனெனில் அன்பாலும், பண்பாலும், விருந்தோம்பாலும் உறவை பெருக்கிவிட்டாய்.

இவை யாவும் இருக்க திடீரென நீ யாருக்கும் விடை கூறாது இன்று ஓடி மறைந்து விட்டாய் உன் உற்றார், உறவினர், உன்னை அன்போடு நேசித்தவர்கள் எல்லோரையும் கண்ணீர் சிந்தவைத்து விண்ணுலகை நாடி விட்டாலே, மீண்டும் உன்னை எப்போது காண்போம். நீ மறைந்தாலும் உன் நினைவுகள் எங்களைவிட்டு அகலாது. உன் இறுதி யாத்திரை எமக்கு கிடைக்கவில்லை இருந்தாலும் எப்போதும் உன் ஏட்டில் எமக்கென ஓர் இடமுண்டு. நெஞ்சு இருக்கும் வரை உன் நினைவு இருக்கும். கண்ணீருடன் வணங்கி விடை பெறுகின்றோம்.

திரு, திருமதி சௌந்தரராஜன், பத்மாவதி குடும்பத்தினரும், மக்கள், மருமக்களும். (UK)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அன்புத்தாயே

அகிலத்தில் உனக்கு நிகர் ஏதம்மா
அன்புக்கு மறுபெயரே நீ அம்மா
அடிமை உனக்கு என்றும் நான் அம்மா
நான் புசிக்க நீ ருசிக்கும் தாயம்மா
நான் அழுதால் உன் கண்ணில் நீர் அம்மா
கடமைக்கு நன்றிக் கடன் செய்ய காலம் ஏதம்மா
கண்ணீரிலே மிதக்கின்றேன் நான் அம்மா
கடவுளாய் அவதரித்தாய் ஆசி கூறம்மா
உன்னையே எண்ணி வாழும்
மகள் கிளி
திருமதி குமாரதுரை பூங்கிளி
பொறுமைத்தாய்
எதையும் தாங்கும் இதயம் படைத்தாயம்மா
குறிப்பறிந்து பசி போக்கும் தருமத் தாயம்மா
ஆன்பு காட்டி அரவணைக்கும் அருமைத் தாயம்மா
பெயருக்கேற்ற தங்கத் தாயம்மா
புன்சிரிப்புடன் வரவேற்கும் புண்ணியத் தாயம்மா
பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடும் பேரன்புத் தாயம்மா
பூட்டப் பிள்ளைகளுடன் கூடிக்குலாவும் குழந்தை அம்மா
திருமதி குமாரதுரை பூங்கிளி

அன்பின் உருவமாய், அமுதச் சுரப்பியாய், பண்பின் வடிவமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் என்றும் எம் உள்ளத்திலும் உயிரிலும்
இரண்டறக் கலந்திட்ட எம்முயிர் மாமியாருக்கு
மருமகன் குமாரதுரை அருணாசலம்

## ஆருயிர் அன்னையே

உன்னை நான் என் தாயாக பெற்றதுவே
நான் செய்த புண்ணியப்பேறு – மாவே
பொறுமை என்னும் நகையணிந்து
புன்முறுவல் தனைச்சுமந்து
பெருமை பெற்ற என் தாயே!
உன்போன்று நானும் பொறுமை பூண்டு வாழ
முனைகின்றேன் தாயே, முடியவில்லை
இந்தப் பேதையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வயதிலே நான் சிறுக்கியாக
நடந்த வேளையிலே வஞ்சனை ஏதுமின்றி
பாலர் பாடசாலை முதல், பல்கலைக்கழக் கழகம் வரை
பத்தரிமாய் என்னை அனுப்பிபட்டம் பெறவைத்த - என் பா'ாக்
கொழுந்தே பவ்வியமான என் தாயே!
எளிமையின் இருப்பிடமான என் தாயே
உன்னைப் போன்று வாழ முயல்கிறேன்
முடியவில்லை இந்தப் பேதையால்!

உற்றார், உறவினர் அன்றி ஊரவர் அனைவரிடமும்
அன்பாகப் பழகி ஆதரித்த என் தாயே
உன்போல நானும் பழக முனைகின்றேன்
உன் மகளால் முடியவில்லையே தாயே!
உங்கள் ஆத்மா என்றென்றும் இறையடி பிரியாது இருக்க
இறைவனிடம் இறைஞ்சி நின்று உங்கள்
பிரிவால் துயரும் மகள் பரிமளா நாகேந்திரன்
சாந்தி, நாந்தி, நாந்தி

**மறக்க முடியவில்லையே**

அன்பின் உறைவிடமாக எங்களுடன் வாழ்ந்து மறைந்த
அம்மம்மாவே உங்களை மறக்க முடியவில்லையே!

உங்கள் மூன்று தலைமுறைக்கு கடமைகள் செய்து, உங்களின்
அன்பையும், அரவணைப்பையும் தந்து சென்ற அம்மம்மாவே

உங்களை மறக்க முடியவில்லையே
கனிவான பேச்சும், கோபமில்லாத அந்த முகத்தையும்,
பொறுமையுள்ள குணத்தையும் மறக்க முடியவில்லையே!
விரும்பிய சாப்பாடுகள் என உழுந்யதுக்களி, ஊதுமா,
எள்ளுருண்டை செய்து தந்த அம்மம்மாவை உங்களை மறக்க
முடியவில்லையே!

உங்கள் பிரிவால் துயருறும்
மனோ, வனஜா, பிரவீன், பிரதீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வருமோ அந் நாட்கள்

கிளிவெட்டியிலிருந்து எம்மைப் பார்க்க திருக்கோணமலைக்கு வரும்போதெல்லாம் எங்கே தேவி அக்க...... எங்க தேவி அக்க.......... என்ற கேட்டபடி வீட்டுக்குள் நுழைவார். பின்நாளில் டென்மார்க்சென்றும் இலங்கைக்கு வரும்போதும் என்னிடம் வரும்போது முதல் வார்த்தையும் எங்கே தேவி அக்கா என்பது தான் என்னைச் செல்லமாக அழைப்பது அப்படித்தான்.

மாமா, மாமி, பிள்ளைகள், மருமக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர். சகலருடனும் மிகவும் அன்பாகவும், பாசமாகவும் இருப்பார். என்காவது யாருடனாவது கோவப்பட்டடதை நான் பார்த்ததில்லை. கடும் சொற்களோ, உரத்த சத்தமோ அவரிடமிருந்து வராது.

முதல் மூவரும் பெண்களாகப் பிறந்ததால் ஆண் குழந்தை வேண்டுமென கௌரி விரதமிருந்து பெற்றதனால் பெரியவனுக்கு தவக்குமார் எனும் பெயரிட்டார். அப்பா கிளிவெட்டி சேமானாக இருந்தாலும் அப்பப்பா ஊரிலேயே பல வயற்காணி. பூமி, மாடு கன்று, வண்டில், வாகனம் எனப் பல வசதிகளோடு இருந்தாலும் வீட்டிற்கு வேலைக்குள்ள ஆட்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் என எப்போதும் வீட்டில் விருந்தாகவே இருக்கும். உதவிக்கு ஆட்கள் இருந்தாலும் அம்மாவும் ஒரு வேலையாட்போலே தன் கைகளாலேயே எல்லாம் செய்வார். அப்பா சாப்பிட்ட பின்னர் தான், தான் சாப்பிடுவார். அது எத்தனை மணியாயிருந்தாலும் சரி.

அப்பா மற்றும் எனது இளைய சகோதரிகளோடு இருந்த காலத்திலும் சரி அதன் பின் டென்மார்க் சென்று இலங்கை வரும் காலத்திலும் கூடிய காலம் எங்களோடுதான் இருந்தார். குழந்தைப் பருவம் தொடக்கம் எனது பிள்ளைகளைப் பராமரிப்பதில் எனக்கு கைகொடுத்த தெய்வம். ஆனந்தன், ஆனந்தி, சியாம், கோபி என எனது நாலுபிள்ளைகளுக்கும் உணவு ஊட்டுவதிலும், தலை உணாவி உறங்கவைப்பதிலும், பாட்டி கதை சொல்வதிலும்பெரும் பங்காற்றினார். 2012 இல் இலங்கை வந்தபோதும் பிள்ளைகள் விடுவதில்லை தலை உணாவுங்கோ, கதை சொல்லுங்கோ, ஊட்டி விடுங்கோ அம்மம்மா என விடவில்லை போட்டி போடும் இவர்களை ஒவ்வொருபக்கமாக மடியில் தலைவைக்கச் சொல்லி அவர்கள் ஆசைகளை நிறைவேற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க்கிலிருந்து வரும்போது பக்தி படங்கள், பக்தி பாடல்களின் ஊனு நிறைய கொண்டு வந்து போட்டுப் பார்ப்பதும் தனது வயதொத்த உறவினர்களைச் சந்தித்து கதைப்பதும் தான் அவருக்கு விருப்பம். தன்னையும் பெற்ற மகன்போலத்தான் பார்ப்பதாக என் கணவர் வருவோரிடமெல்லாம் பெருமையாக என் அம்மவைப் பற்றிப் புகழ்வார். அந்தளவுக்கு அவரின் மருமகன்களையும் உபசரிப்பதிலும் மதித்து நடப்பதிலும் காட்டும் பற்று பாசம் டென்மார்க்கிலிருந்து தொலைபேசியில் கதைக்கும் போதும் இறுதியில் எங்க மருமகன் எனக் கேட்டு அவருடன் கதைத்த பின் தான் உரையாடலை நிறுத்துவார்.


இவ்வாறான உயர்ந்த பண்புகையெல்லாம் சொல்லி ஆறாது, அன்பின் இலக்கணமே, பாசத்தின் பிறப்பிடமே, எம்மையும் பிள்ளைகளையும் சீராட்டி வாழ வைத்த பொறுமையின் உலகமே உங்கள் ஆத்மா சாந்தியடைய கிளிவெட்டி முத்துமாரியம்மனையும், வெருகலம் பதியானையும், திருக்கோணேசனையும் வேண்டி பிராத்திக்கின்றோம்.

மகள்

திருமதி. நிர்மலா தேவி தயானந்தரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Dear Grandmother Thangamuthu**

You are a beautiful and lively grandmother
I can imagine that you made my mother to be strong
So she could have a good life and raise me well.
May you rest in peace in heaven.

Your s sincerely.
Your Grandson,
Kumaran



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எல்லா வழங்களும் நிறைந்ததும், இயற்கைத் துறைமுகம் கொண்டதுமான, வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான, இலங்கைத்தீவின் கிழக்கு வாசலில் அமைந்த பூகோல கைலாயம் என்று அழைக்கப்படுவதுமான, ஆதி சிவன் உறையும் புண்ணிய பூமியுமான திருகோணமலை மாவட்டத்தின் கிளிவெட்டிக் கிராமத்தினை பிறப்பிடமாகவும், பனி கொட்டிப் பள பளக்கும் பால் பசுக்கள் நிறைந்த டென்மார்க் நாட்டினை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்து, தனது 86 வது அகவையில் இறைவனடி சேர்ந்தார் மக்களைப் பெற்ற மகாராசியாக வாழ்ந்தார்.
அவர்களின் திருப்பாதங்களுக்கு என் முதல் வணக்கம்

அம்மா நீங்கள் கொடியில் எலுமிச்சை, கோத்திரத்தின் நற்பவளம். அம்மா நீங்கள் சாதி எலுமிச்சை, உங்கள் சந்ததியின் நற்பவளம் சறுக்கியதோ, பல்லின் ஒளி மங்கியதோ.

அம்மா நீங்கள் முற்றுக் கிணற்றடியில் முகம் கழுவப் போன இடத்தில் முத்துச் சறுக்கியதோ, முகள்தின் ஒளி மங்கியதோ.

உங்கள் வீட்டில் தண்ணீர் மடம் என்று தவிப்பாறிப் போவினமே, இளநீர் மடம் என்று இளப்பாறிப் போவினமே, புசித்து இருப்பவரைப் பார்த்து இருக்க மாட்டீர்கள் கொடுத்த கை இன்று ஓய்ந்து சாய்ந்ததுவோ, துச்சமாக உடல் துறந்து தூரப் பயணம் சென்று விட்டீர்கள்.

உங்கள் குடும்பத்தினர் பார்த்து திரிந்தாலும், ஒரு பாதையிலும் கிட்டமாட்டீர்கள். தேடித்திரிந்தாலும் ஒரு தேசத்திலும் கிட்டமாட்டீர்கள். ஆதி சிவன் காலடி தான் அபயம் என்று சென்று உங்களை இறைவன் காத்து இரட்சிக்கவும் அவர் அருள் வேண்டி உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

திரு, திருமதி. தம்பிப்பிள்ளை, செல்லம்மா குடும்பத்தினர், டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்டிருண்டோ உன்போல் - கண்டிலேன்

பண்ணிநேர் மொழியும், கண்ணினோர் அழியும்
பெண்ணின் ஓர் உருப்போர்த்த பேதாய் - தங்கமுத்து
நண்ணினோர் நயந்தோர் நலம்பட உரைத்தோரென
எண்ணிலோர்க்கு உண்ணீரும், உறவும் உவந்தாய் வாழி

பார்க்கும் போதெல்லாம் பக்கம் வந்து
ஊர்க்கதை பேச உச்சக் கொட்டி நான் கேட்க
பேர்சொல்லி பெரியாரை நான் வழிக்க
ஆரென்னு உறவு சொல்லி ஊரறுத்த உறவே வாழி

பச்சரிசி ஊறவச்சி, பக்குவமா மாவிடிச்சி
எச்சமில்லாப் பானையிலே எப்பம் கள்ளு விட்டு
உச்சிவெயில் ஒப்புக்குக் காட்டி கஞ்சிவிட்டு பிசைந்து
வைச்சி அடுப்பருகே வாயிற் கதவு சாத்தி

பட்டி வெள்ளி எழும்பமுன்னே பல் விளக்கி நீ முடிச்சி
சட்டி வைச்சி அப்பம் சுட்டு சற்றே துருவல் சேர்த்து
கட்டி வெல்லம் கனக்கவைத்து கசியாமல் பாகஞ்செய்து
தட்டி எழுப்பி நீ தந்த, பூ அப்பமெண்ணு பேர் சொன்ன

கட்டித் தயிர் விட்ட கதலிப் ப்ழம் சேர்த்து
சட்டி வெல்லம் சோத்துப் பிசைந்து
நெட்டிப் பச்சை அரிசி மாச்சேர்த்து
குட்டி, குட்டியாய்ச் சுட்டுத்தந்த வார்ப்பமெண்ணு

தட்டு, முட்டுச் சாமானோடு ஊரூராப் போகையிலும்
விட்டு, விட்டுப் போகாமல் கிட்ட வந்து ஆதரிக்கும்
மொட்டவிழ்ந்த மலர்க்குன்றே — தங்கமுத்து
கிட்ட வந்தும் வாய்க்கரிசி போடாம எட்ட நின்று போனேனே

ஆரார்க்கோ அன்னமிட்ட அளவிலாத தர்மமிட்ட
ஊராக்கும் உள்ளளவும் உவந்தளித்த
போரார்க்கு பிறை சூடர்க்கும் பங்கு வைச்ச
தாரார்க்கும் கொன்றை தாழ் சேர வேண்டுவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலையிட்ட கரும்புபோல ஆயிரிச்சி என் மனசி
சோலை வழர் தெங்குசூழ் கிளிவெட்டி - மூலை முடுக்கெல்லாம்.
ஞாலை, மாலை அறியாது கரைந்தோம் உன் அகத்து
வேலை நிகர்த்த சேதி, ஓலை வடிவில் வந்ததுவே

பாலை நடப்பார்க்கு பசுஞ்சோலை நீ அன்றோ — செய்
கோலை வளையாத அத்தார்க்கு அருகமர்ந்து
மேலைத் தவத்துறைந்த மெய்வருத்தும் செய்தி கேட்டு மாலையிட்ட
கோலம் மனதில் வந்து மனம் வருந்திப் போனேனே

அறுபது நான் கடந்து ஆசி வேண்டித் தாழ் பணிய
மறு அறு மனத்தாள் அகமது மகிழ்ந்து
வெறு அறு செயல் வென்று விழங்குவீரென
குறு அறு கொன்றைக் தாழ் சேர வேண்டுவனே

ஆழ் சேனை அடிமை என ஆண்ட காலத்தும்
கோள் திரிந்து குறைந்து நாம் குலைத்த காலத்தும்
வேள் சேதி வெந்து தணல் ஆன காலத்தும் - குணம் திரிந்திடாத
பூழ் கடம்பர் பொன்னடி சேர வேண்டுவனே

உண்டி கொண்டார் ஓராயிரவர் மேற்காண்
சண்டி கொண்டார் மீதுமொரு தகவு சொல்லா
பெண்டிருண்டோ உன்போல் கண்டிலேன்
வண்டிருக்கும் பெண்டுகொண்ட பெருமானார் தாழ் சேர

நோர்வே, துரைநாயகம், சொக்கன், டிலோஜினி
லண்டன் நவமணதேவி

**எனது அன்பான பாட்டி**

**எப்போதும் சிரித்த முகமும்,பாசத்தோடு அணைக்கும் குணமும், அன்பான வார்த்தைகளும் என் மனதில் எப்பொழுதும் சந்தோஷத்தையும், ஆறுதலையும் தந்த பாட்டி.**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்**

**உங்கள் பேரன்**
**மன்மதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆலயதரிசன விதி

(சுருக்கம்)

சைவசமயிகள் ஒவ்வொருவரும் தினம் தோறும் திருக்கோயிலுக்குச் சென்று விதிப்படி பயபக்தியுடன் சுவாமி தரிசனஞ் செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சுவாமிதரிசனஞ் செய்ய இயலாதவர், சோமவார மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி ஸ்கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலேனும் தவறாது செய்தல் வேண்டும்.

சுவாமி தரிசனம் செய்ய விரும்புவோர், திருக்கோயிலுக்கு சமீபத்திலேயுள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்த்திரந்தரித்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக் கொண்டு பரிசுத்தமாகக் கோயிலுக்குப் போதல் வேண்டும்.

போகும்போது ஒரு பாத்திரத்திலே தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், பத்திரபுஷ்பம், முதலியன வைத்து அரைக்குக் கீழ்ப்படாத மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு போதல் வேண்டும்.

ஆலயத்திற்குச் சமீபித்ததும், ஸ்தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கடவுளை மனதிலே தியானித்துக் கொண்டே உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகி பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

அஷ்டாங்க நமஸ்காரமாவது : தலை, கையிரண்டு, செவியிரண்டும், மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு அங்கங்களும் நிலத்திலே தோயும்படி வணங்குதல்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது : தலை, கையிரண்டு, முழங்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்புகளும் நிலத்திலே தோயும்படி வணங்குதல்.

திரயாங்ய நமஸ்காரமாவது : சிரசிலே இரண்டுகைகளையும் குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பன்னிரண்டுதரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம், இருதரம் பண்ணல் கூடாது.

நமஸ்காரம் பண்ணும்போது கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசைவைத்து நமஸ்காரஞ் செய்தல் வேண்டும். நமஸ்காரம் செய்து முடிந்தவுடனே எழுந்து பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டு தரமும் பார்வதி தேவியாரையும் விஷ்ணுவையும் நான்கு தரமும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே ஸ்தூபி நிழலேனும் துவஜஸ்தம்ப நிழலேனும் இருப்பின் அந்நிழலில் மூன்று கூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லல் வேண்டும். சுவாமி உற்சவங் கொண்டருளுங் காலத்திலே உடன் செல்லும்பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம்.

அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதக்ஷிணம் நமஸ்காரம் முதலியவை பண்ணலாகாது.

பிரதக்ஷிணம் முடிந்தவுடன் சந்நிதானத்தில் மீண்டும் நமஸ்காரஞ் செய்து உள்ளே போய்க் கடவுளைத் தரிசித்து சுத்தமான சித்தத்துடனே பக்திரஸம் மிகுந்த தோத்திரங்களை இயன்றமட்டும் இராகத்துடனே பாடித் துதி செய்தல் வேண்டும்.

பின் அர்ச்சகரைக் கொண்டு பத்திர புஷ்பங்களினால் சுவாமிக்கு அர்ச்சனை செய்வித்து தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் முதலியவற்றை நிவேதிப்பித்து, கற்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணுவித்து, அவருக்குத்தம்மால் இயன்ற தக்ஷிணை கொடுத்து அவரிடமிருந்து விபூதி பிரசாதங்கள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பின் சுவாமியைத் தரிசித்துக் கொண்டு, புறங்காட்டாது பலிபீடத்துக்கு இப்பால் வந்து நமஸ்காரஞ் செய்து வடக்குமுகமாக இருந்து சுவாமியை மனத்திலே தியானஞ் செய்து கொண்டு தன்னால் இயன்ற உரு அவருடைய மந்திரம் ஜெபித்து பின் எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகளருளிச் செய்த

## தேவாரப் பதிகங்கள்

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 01

என்போடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறும்
முடனாய நாள்க ளவைதாம்
அன்போடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 02

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 04

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 05

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நான்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 06

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேளபட விழிசெயதன்று விடைமே லிருந்து
    மடவாள்த னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
    உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்ற னோடும்
    இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
    அடியா ரவர்க்கு மிகவே. 08

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
    பசுவேறு மெங்கள் பரமன்
சலம ளோடெருக்கு முடிமே லணிந்தென்
    உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
    வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்ல நல்ல
    அடியா ரவர்க்கு மிகவே. 09

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
    குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியுநாக முடிமே லணிந்தென்
    உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமனைவாதி லழிவிக்கும் அண்ணல்
    திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
    அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
    வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
    மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
    நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
    அரசாள்வ ராணை நமதே 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடுடைய செவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவும் நக்காவெனவும் நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே

பூவார்மலர் கொண்டடியார் தொழுவார்புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்.
தூமாமழைநின்றதிரவெருவித் தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே.

கற்றாங்கெரியோம்பிக் கலியைவாராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றாபாவமே

வீடலாலவாயிலாய் விழுமியார் கணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலி நீள்கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுலாவும் மதிவந்துலாவும் மதினமாளிகை
தேனுலாவும் மலர்ச்சோலைமல்குந் திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்ட வெண்ணெய்ப் பெருமானடி
ஞானமாகநினைவார் வினையாயின நையுமே

கள்ளார்ந்த பூங்கொன்றைமதமத் தங்கதிர்மதிய
முள்ளார்ந்த சடைமுடியெம் பொருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதி சடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கும்வேளுரே

விருதுகுன்றமாமேருவினாணரவாவன லெரியம்பாப்
பொருதுமுவெயில்செற்றவன் பற்றிநின்றுறைபதியெனநாளுங்
கருதுகின்றவூர்கனை கடற்கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருதிநின்றுகேதீச்சுரங்கைதொழக்கடுவினையடையாவே

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வென்மாட நெடுவீதித்
தண்புகாச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே

வாழ்ந்தநாளும் மினிவாழு நாளும்மிவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லிகாள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி னான்றன் புக லூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்க ளுங்கடுயர் தீருமே

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவாலவாயான்றிருநீறே

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாக மதித்துத்
தடந்திரசேர்புனல்மாதைத் தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ் முப்புரிநூலர் துன்பமோடின்பமதெல்லாங்
கடந்தவர் காதலில்வாழும் கற்குடிமாமலையாரே

நன்றுடையானைத்தீய திலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமை யொருபாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்குளிரும்மே.

பாடலநான் மறையன் படிபட்டகோலத்தன்றிங்கள்
சூடலன்மூவிரையசூலம்வலனேந்திக்
கூடலர்மூவெயிலு மெரியுண்ணக் கூரெரிகொண்டெல்லி
ஆடலனாதிரைய னாரூரமர்ந்தானே

வீடுபிறப்பெளிதாமதனை வினவுதிரேல்வெய்ய
காடிடமாக நின்று கனலேந்திக்கைவீசி
யாடுமவர்சடையானவன் மேயவாரூரைச்சென்று
பாடுதல் கைதொழுதல்பணிதல்கருமமே.

மங்கையர்க் கரசிவளவர்கோன் பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும்பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால் வேதமும் பொருளுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த வாலவாயாவதுமிதுவே

சுண்ணவெண்ணீ றணிமார்பிற்றோல்புனைந்
தெண்ணரும்பல்கணமேத்தநின்றாடுவார்
விண்ணவர்பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர்மேனியெம்பிஞ்ஞகனாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ் சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்பெருமணமேவிநின்
இன்புறுமெந்தையிணையடி யேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டுசெய்வாரே

வரிய மறையார் பிறையார்
மலையோர் சிலையா வணங்கி
எரிய மதில்கள் எய்தார்
எறியு முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா
அவரெம் பெருமா னடிகளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

சில்லுருவாய் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையா துயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாக தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொல் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயினவா றுவிலக் ககிலீர்
கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே
குடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

மாதர்பிறைக்கண்ணியானை மலைமான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ்சுவடுபடா மலையாறடைகின்றபோது
காதன் மடப்பிடியோடுங்களிறுவருவன கண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதன கண்டேன்

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே

மாசில்வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தையிணையடி நீழலே

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்தி செய்கேனென்னை நீயிகழவேண்டாம்
முத்தனே முதல்வாதில்லையம் பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல் காண்பானடியனேன் வந்தவாறே

பண்ணினேர் மொழியாளுமைபங்கரோ
மண்ணினார் வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள் செய்ம்மினே.

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி நாரண நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருககவே

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
யதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்மினே

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங்கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே

தீர்த்த னைச்சிவனைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய வொருவனை
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்தனைக்கொடி யேன்மறந் துய்வனோ

நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்கலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே

கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புறஞ் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே

விண்ணு ளார்தொழு தேத்தும்வி ளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்குமருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்கா யொற்றியூருடையகோவே

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங் கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே

அங்கத்தை மண்ணுக்காக்கி யார்வத்தை யுனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதனா ணாயேனுன்னை
எங்குற்றா யென்றபோதா விற்குற்றே னென்கண்டாயே.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைநீ ரமையவாட்டிப்
பூசனையீ சனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக்க டையமுன் னிற்குமே.

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித்தி ரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதி னாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு கோடி பிரமர்க ளொங்கினார்
ஆறு கோடிநா ராயண ரங்஗னே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி ராதவ னீசனொ ருவனே

நங்கையைப் பாகம்வைத்தார் ஞானத்தைநவிலவைத்தார்
அங்கையிலனலும் வைத்தாரானையினுரிவைவைத்தார்
தங்கையில்வாளும் வைத்தார் தாமரைமலரும் வைத்தார்
கங்கையைச்சடையுள் வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பானாரே.

அங்கையுளனலும் வைத்தாரறுவகைச் சமயம் வைத்தார்
தங்கையில் வீணை வைத்தார் தம்மடிபரவ வைத்தார்
திங்களைக் கங்கையோடு திகழ்ந்தருசடையுள் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மாமறைக் காடனாரே

விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கணான்குமங்கம்
பண்ணினார் பண்ணின்மிக்கபாடலார் பாவந்தீர்க்குங்
கண்ணினார் கண்ணின்மிக்கநுதலினார் காமற்காய்ந்த
வெண்ணினா ரெண்ணின்மிக்காரிடை மருதிடங்கொண்டாரே

கங்கையைச் சடையுள்வைத்தார் கதிர்பொறியரவும் வைத்தார்
திங்களைத் திகழவைத்தார் திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும் வைத்தாரை யனை யாறனாரே

பொடிதனைப்பூசவைத்தார் பொங்கு வெண்ணூலும்வைத்தார்
கடியதோர் நாகம்வைத்தார் காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னை மார்பிலோர் பாகம்வைத்தார்
அடியினை தொழவும்வைத்தாரை யனை யாறனாரே.

முற்றுணையாயினானை மூவர்க்கு முதல்வன்றன்னைச்
சொற்றுணையாயினானைச் சோதியை யாதரித்து
உற்றுணர்ந்துருகி யூறியுள் கசிவடையவர்க்கு
நற்றுணையாவர்போலு நனிபள்ளி யடிகளாரே.

எண்பதும்பத்துமாறு மென்னுளேயிருந்து மன்னிக்
கண்பழக்கொன்று மின்றிக்கலக்க நானலக்கழிந்தேன்
செண்பகந்திகழும் புன்னைசெழுந்திரட்குரவம் வேங்கை
நண்புசெய் சோலைசூழ்ந்த நனிபள்ளியடிகளாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணினார் பாடலாகிப் பழத்தினிலிரதமாகிக்
கண்ணினார் பார்வையாகிக் கருத்தொடுகற்பமாகி
எண்ணினா ரெண்ணமாகியே ழுலகனைத்துமாகி
நண்ணினார் வினைகடீர்ப்பார நனிபள்ளியடிகளாரே.

மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுளசுற்ற மென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக்கிடமாகாதே
கனையுமாகடல் சூழ்நாகைமன்னு காரோணத்தானை
நினையுமாவல் லீராகிலுய்யலா நெஞ்சினீரே.

நாயினுங்கடைப்பட்டேனை நன்னெறி காட்டியாண்டாய்
ஆயிரமரவ மார்த்தவமுதனே யமுதமொத்து
நீயுமென்னெஞ்சினுள்ளே நிலாவினாய் நிலாவிநிற்க
நோயவைசாருமாகி னோக்கியே நீயருள்செயாயே.

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டு மிவ்வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கைசெஞ்சடைமேல் வைத்ததீ வண்ணனே

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் னடியே னையுந்தாங்குதல்
என்கடன் பணிசெய்துகிடப்பதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தாண்டகங்கள்

*திருச்சிற்றம்பலம்*

அரியானையந்தணர் தஞ்சிந்தையானை
யருமறையின் கத்தானையணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக் கனலைக்காற்றைக்
கனைகடலைக் குலவரையைக்கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே

கற்றானைக்கங்கையர் சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங் கருதினானை
அற்றார்க்குமலர்ந்தார்க்குமருள் செய்வானை
யாருரும் புகுவானையறிந்தோமன்றே
மற்றாருந்தன்னொப்பாரில்லா தானை
வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும் பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே

எத்தாயரெத்தந்தை யெச்சுற்றத்தா
ரெம்மாடுசும்மாடா மேவர்நல்லார்
செத்தால்வந்து தவுவாரொருவரில்லைச்
சிறுவிறகாற்றீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாயவேடத்தாய் நீடுபொன்னித்
திருவானைக்காவுடைய செல்வாவென்ற
னத்தாவுன் பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென் செய்கேனே

வேற்றாகிவிண்ணாகிநின்றாய் போற்றி
மீளாமேயாளென்னைக் கொண்டாய் போற்றி
யூற்றாகியுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாதசத்தத் தொலியே போற்றி
யாற்றாயங்கேயமர்ந்தாய் போற்றி
யாறங்கநால்வே தமானாய் போற்றி
காற்றாகியெங்குங் கலந்தாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தொருத்தி யொருபாகத்தடங்கக்கண்டு
நிலைதளரவாயிரமா முகத்தினோடு
பாய்ந்தொருத்திபடர்சடை மேற்பயிலக்கண்டு
படவரவும்பனிமதியும் வைத்தசெல்வர்
தாந்திருந்தித்தம்மனத்தை யொருக்காற்றொண்டர்
தனித்தொருதண்டுன் றிமெய்தளராமுன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தியென்பீராகிற்
பொல்லாப்புலாற்றுருத்தி போக்கலாமே.

அப்பனீயம்மை நீ யையனுநீ
யன்புடையமாமனு மாமியுநீ
ஒப்புடையமாதரு மொன்பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமுமோரூருநீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சத்துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீயிம்மணி நீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்த செல்வனீயே

ஆட்டுவித்தாலா ரொருவராடாதாரே
அடக்குவித்தாலா ரொருவரடங்காதாரே
ஒட்டுவித்தாலா ரொருவரோடாதாரே
யுருகுவித்தாலா ரொருவருருகாதாரே
பாட்டு வித்தாலா ரொருவர் பாடாதாரே
பணிவித்தலரொருவர் பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர் காணாதாரே
காண்பரார்கண்ணுதலாய் காட்டாக்காலே

திருக்கோயிலில்லாத திருவிலூருந்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினோடு பலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாதவூரு
மருப்போடுமலர்பறித் திட்டுண்ணாவூரு
மவையெல்லா மூரல்லவடவிகாடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒருக்காலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன்மலர்ப்பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள்கெட வெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறே தோவென்னில்
பெருநோய்கண்மிகநலியப்பெயர்த் துஞ்செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகியிறக்கின்றாரே.

சங்கநிதிபதும நிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத் தருவரேனு
மங்குவாரவர் செல்வமதிப்போமல்லே
மாதேவர்க்கே காந்தரல்லாராகில்
அங்கமெலாங்குறைந்தழுகு தொழுநோயாராய்
ஆவுரித்துத்தின்னும் புலையரேனும்
கங்கைவார்சடைக் கரந்தார்க்கன்பராகில்
அவர்கண்டீர்நாம் வணங்குங்கடவுளாரே

நின்னாவார்பிறரன்றி நீயேயானாய்
நினைப்பார்கண்மனத்துக் கோர்வித்துமானாய்
மன்னானாய்மன்னவர்க் கோரமுதமானாய்
மறைநான் குமானாயாறங்கமானாய்
பொன்னானாய் மணியானாய்போகமானாய்
பூமிமேற்புகழ் தக்கபொருளேயுன்னை
என்னானாயென்னானா யென்னினல்லா
லேழையேனென் சொல்லியேத்துகேனே.

எல்லாவுலகமு மானாய்நீயே
ஏகம்பமேவியிருந்தாய் நீயே
நல்லாரை நன்மையறிவாய் நீயே
ஞானச்சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லாவினைகளறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி யென்மேல்வைத்தாய் நீயே
செல்வாயசெல்வந்தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேயென் செல்வமேதேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ் சுடர்நற்சோதீமிக்க
உருவேயென்னுறவே யென்னூனேயூனின்
உள்ளமேயுள்ளத்தினுள்ளே நின்ற
கருவேயென்கற்பகமேகண் ணேகண்ணிற்
கருமணியேமணியாடு பாவாய்காவாய்
அருவாயவல்வினை நோயடையாவண்ணம்
ஆவடுதண்டுறையுறையும மரரேறே.

வடிவேறு திருசூழந்தோன்றுந் தோன்றும்
வளர்சடை மேலிளமதியந் தோன்றுந்தோன்று
கடியேறுகமழ்கொன்றைக் கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடு கலந்துதோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வை தோன்று
மெழிறிகழுந்திருமுடியு மிலங்கித்தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்துதோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம்புனிதனார்க்கே.

குலம்பொல்லேன்குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமேபெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லேனான் பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோடிசைந்திலேனடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கலாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேனிரப்பதல்லாலீய மாட்டேன்
என்செய்வான்றோன்றினே னேழையேனே.

சங்கரனே நின்பாதம் போற்றிபோற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றிபோற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றிபோற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றிபோற்றி
அங்கமலத்தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றிபோற்றி
செங்கமலத்திருப்பாதம் போற்றிபோற்றி
திருமூலட்டானனே போற்றிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக்கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
    ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
    சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
    என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
    காணக் கண் அடியேன் பெற்றவாறே

உற்றவர்க்குதவும் பெரு மானை
    ஊர்வதொன்றுடை யான் உம்பர் கோனைப்
பற்றினார்க் கென்றும் பற்றவன் தன்னைப்
    பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
    ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
    காணக்கண் அடியேன் பெற்றவாறே.

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
    செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
    காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
    மருவி ஏத்தி வழி படப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
    காணக் கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்ட லம்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளராமதிசேர் சடையானைக்
கொண்டையந்தடங் கண் உமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை
அருமறையவை அங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங் கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் பானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

விண்ணவர் தொழுதேத்த நின்றானை
வேதம் தான் விரித்து ஓதவல்லானை
நண்ணினார்க் கென்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித் தென்றும் நினைந்தெழுவார்கள்
    சிந்தையில் திகழும் சிவன் தன்னைப்
பந்தித்தவினைப் பற்றறுப் பானைப்
    பாலொடானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை
    ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக்கம்பன் எம்மானைக்
    காணக் கண் அடியேன் பெற்ற வாறே

வரங்கள் பெற்றுழல் வாள ரக்கர் தம்
    வாலிய புரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் தன்பெரு வேள்வி
    நிரந்தரஞ் செய்த நிர்க்கண்டகனைப்
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
    பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
    காணக் கண் அடியேன் பெற்றவாறே

எள்கல் இன்றி இமையவர் கோனை
    ஈசனை வழிபாடு செய்வார் போல்
உள்ளத் துருகி உகந்துமை நங்கை
    வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
    வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
    காணக் கண் அடியேன் பெற்றவாறே

பெற்றம் ஏறுக தேறவல் லானைப்
    பெரிய எம்பெருமான் என்றெப்போதும்
கற்றவர் பரவப்படு வானைக்
    காணக் கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
    குளிர்பொழில் திருநாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார்
    நன்னெறி உலகெய்துவர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தாபிறைசூடிபெரு மானேயருளாளா
வெத்தான்மற வாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணை தென்பால்வெண்ணைய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினி யாரைநினைக்கேனே.

மற்றுப்பற்றெனக்கின்றிநின் றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப் பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ் சீர்க்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே

முத்தாமுத்திதரவல்லமகிழ்மென் முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனே தேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர் போற்றும்பரமா பழையனூர்மேய
அத்தாவாலங்காடா வுன்னடியார்க்கடியேனாவேனே

மருவார்கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால்பிரமனிந் திரற்குந் தேவர்நாகர்தான வர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துப் பெரியபெருமானடிகளே

வாழ்வாவதுமாயம்மி துமண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுறநின்றான் திருக்கேதாரமேனீரே

நத்தார்படை ஞானன்பசுவேறிநனை கவிழ்வாய்
மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான் றிருக்கேதீச்சரத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கேனும்மிருந் துன்னடியேனுனை நினைந்தால்
அங்கேவந்தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கேயென் வினையையறுத்திட் டெனையாளுங்
கங்காநாயகனே கழிப்பாலைமேயானே

பண்ணிடைத் தமிழொப்பாய்பழத் தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய் கடுவிருட்சுடரொப்பாய்
மண்ணிடையடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே

தில்லைவாழந்தணர் தமடியார்க்குமடியேன்
    திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையேயென்னாதவியற்பகைக்குமடியேன்
    இளையான்றன் குடிமாறனடியாதர்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்
    விரிபொழில்சூழ்குன்றையார் விறன்மிண்டற்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்
    ஆரூரனாரூரிலம்மானுக்காளே

குறைவிலா நிறைவே குணக்குன்றே
    கூத்தனே குழைக்காதுடையானே
உறவிலேனுனையன்றி மற்றடியேன்
    ஒருபிழைபொறுத்தா லிழிவுண்டோ
சிறைவண்டார்பொழில் சூழ்திருவாரூர்ச்
    செம்பொனே திருவாவடுதுறையுள்
அறவனேயெனையஞ்ச லென்றருளாய்
    ஆரெனக்குற வமரர்களேறே

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகளருளிச் செய்த

# திருவாசகம்

## அடைக்கலப்பத்து

### பக்குவ நிண்ணயம்

### திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது

**கலவைப் பாட்டு**

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்த மைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
வழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே.

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளால்என் பிறவியைவேர் அறுப்பவ னேஉடை
யாயடி யேன்உன் அடைக்கலமே.

பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத் துப்பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெரு மான்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

மொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத் தில்நின் கழற்புணைகொண்டு
டிழின்றவன்பர்கள் ஏறினர் வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின் றனனுடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையே
ஆழியப் பாவுடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே

மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளிவலையில் அகப்பட்டுப்
பண்கண னாய்ப்புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
மங்கணனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ள
மாகெடு வேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன்நின்னை யேஅறியு
மறிவறி யேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கி னேன்வினை யேஎன் விதியின்மையாற்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

மெய்தானரும்பி விதிர்விதிர்த் துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்த்துன்னைப்போற்றிசயசய போற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே

கடையவனே கருணையினாற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்றோ
லுடையவனே மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேனெம்பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவேறுகோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாராணனுநான்மறைய
மாவேறுசோதியும் வானவருந்தாமறியாச்
சேவேறு சேவடிக்கேசென்றூ தாய்கோத்தும்பீ

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவனெவ்வுயுர்க்குமியல்பானான் சாழலோ.

முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறியறிவித்துப்பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவாறார் பெறுவாரச்சோவே.

பாரொடுவிண்ணாய்ப்பரந்த வெம்பரனே
பற்றுநான்மற்றிலேன் கண்டாய்
சீரொடுபொலிவாய சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறைசிவனே
ஆரொடுநோகேனார்க் கெடுத்துரைக்கே
னாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே

சோதியேசுடரே சூழொளிவிளக்கே
சுரிகுழற்பணை முலைமடந்தை
பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத்தயனு மாலறியா
நீதியே செல்வத்திருப் பெருந்துறையின்
நிறைமலர்க் குருந்தமேவியசீர்
ஆதியே அடியேனாதரித் தழைத்தால்
அதெந்துவேயென்றருளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையேயப்பா வொப்பிலாமணியே
அன்பினில் விளைந்தவாரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையேன்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையேயுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான்மதித்துமிரேன்
றேனேயுமலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே

பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோடிறப்பு மஞ்சேன்
றுணிநிலா வணியினான்றன் றொழும்பரோடழுந்தியம்மால்
றணிநிலதிம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே

உற்றாரை யான் வேண்டேன் னூர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரையான் வேண்டே கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி!
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம் முழுமையாகக் கிடைப்பது அரிதாதலாலும், கிடைத்தாலும் நூலின் கிரயம் அதிகரித்திருப்பதாலும், ஆலயங்களுக்கும், மக்களுக்கும் மிகவேண்டியதாகிய திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், சிவபுராணம் ஆகிய நான்கினையும் இந்நூலிற் சேர்த்துப் பதிப்பிக்கத் திருவருள் கூடியுள்ளது.

## திருப்பள்ளியெழுச்சி

*திருச்சிற்றம்பலம்*

போற்றிஎன் வாழ்முதலாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 01

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அம் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே. 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்கு
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 03

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 04

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 05

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகி றார்அணங்கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திருவுத்தர கோசமங்கை
உள் ளாய்திருப்பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளுமாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 07

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந்தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 08

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டார்
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறையாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உலகுக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 09

புவனியிற் போய்ப்பிறவாமையில் நாள்நாம்
போக்குகின் றோம் அவமேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப் படவும்
நின் அலர்ந்தமெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலையில் அருளிச்செய்த

# திருவெம்பாவை

*திருச்சிற்றம்பலம்*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழஅடி யீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் 06

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடே-லோ ரெம்பாவாய். 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர் பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூ ண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தெம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கு அப்பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிச்செய்த

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்
(மனம் ஆனந்தத்திலேலயப்படுந் தன்மை)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபநல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டி சைமின்
சித்தியும் கௌரியும் பார்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறனம் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 01

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடு வகிர் அண்ண கண்ணீர்
வம்மின்கள் வந்(து) உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புற நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே. 02

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
ஆழியானாத நல்வேலன் தாதை
எந்தரம்ஆள் உமையாள் கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காச ணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்ப ணிமின்கள் கறை யுரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 04

அறுகெ டுப்பார் அயனும் அரியும்
மன்றி மற்று இந்திரனோ டமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற் பின்ப ல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கண் அப்பற்
காடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 05

உலக்கை பல ஓச்சுவார் பெரிய
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்குரு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே 06

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்ட தடங்கண் மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைந்தி லங்கச்
சோற்றெம்பிரான் என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 08

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 09

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
வத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 10

மாடு நகைவாண் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யா மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோட்
பையர வல்குன் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தார்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் ஆகமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
மூனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாயமுற்றும ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 20

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவிசைப்பா

## திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் காரமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்க்ள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமரசே கரனே
உனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா நுகரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலுலாமனந்தந் தெனகையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலார் தேவர் குலமுழுதாழுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங்கழனித் திருவிடைகழியிற்
றிருக்கு ராநீழற் கீழ்நின்ற
வேலுலாந்தடக்கை வேந்தனென்
சேர்ந்தனென்னுமென் மெல்லியலிவளே

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணிபுவன போகமே யோக
வெள்ளமே மேருவில்வீரா
ஆறணி சடையெம் மற்புதக்கூத்தா
அம்பொன் செயஅம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனேயுன்னைத்
தொண்டனே னிசையுமாறிசையே.

புவனநாயகனே யகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம் பொழியும்
பவளவாய்மணியே பணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்ன காபரணா
அவனிஞாயிறுபோன்றருள் புரிந்தடியே
னகத்திலுமுகத்தலை மூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலு மமர்ந்தாய்
தனியனேன்றனிமை நீங்குதற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர்முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தண் நீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரவந்
துவளுமே கலையும் துகிலுமே யொருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

தெள்ளுநீ றவன் நீ றென்னுடல்விரும்பும்
செவியவன் அறிவுநூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்
கிள்ளை பூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம்பலை செய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே என்னுமென்மனனே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

*திருச்சிற்றம்பலம்*

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கண் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

மீண்டு மனத்தவர் போமின்கண மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

## விநாயக்கடவுள்

~ விருத்தம் ~

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற
எண்ணியபொருளெலா மெளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன்மலரடிப் பணிந்து போற்றுவாம்.

திருவுங்கல்வியுஞ் சீருந்தழைக்கவுங்
கருணைபூக்கவுந் தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

நல்லசொற்பொருணாளுநடாத்தவும்
எல்லைகாணரும் பேரின்பமெய்தவும்
வெல்லும்யானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக்குரியானை வழுத்துவாம்

உள்ளமெனுங் கூடத்திலூக்கமெனுந்
தறிநிறுவியுறுதியாகத்
தள்ளரியவன் பென்னுந்தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப்பசு போதக்கவளமிடக்
களித்துண்டுகருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்திவேழத்தை
நினைந்துவரு வினைகடீர்ப்பாம்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான்

பூமலர்மிசைவருபுனிதனாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமையெய்தியே
மாமறைமுதற்கொரு வடிவமாகியோன்
காமருசெய்யபூங்கழல்கள் போற்றுவாம்.

நாரணனென்னுந்தேவுநான் முகத்தவனுமுக்கட்
பூரணன்றானுமாகிப் புவிபடைத்தளித்துமாற்றி
ஆரணமுடிவுந்தேறாவநாதியாயுயிர்கட்கெல்லாங்
காரணனாயமேலோன் கழலிணைக் கருத்துள்வைப்பாம்

பங்கயன்முகுந்தனாம் பரமென் றுன்னியே
தங்களிருவருஞ் சமர்செய்துற்றுழி
அங்கவர்வெருவர வங்கியாயெழு
புங்கவன்மலரடி போற்றிசெய்குவாம்.

ஏகனே போற்றியார்க்குமீசனே போற்றியம்மை
பாகனேபோற்றிமேலாம் பரஞ்சுடருருவே போற்றி
மேகமார்கழனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன்வேள்விமுடித் திடுமுதல்வாபோற்றி

வேதநாயகனேபோற்றி விண்ணவர்தலைவா போற்றி
மாதொருபாகாபோற்றி மறுசமயங்கண்மாளப்
பேதகஞ்செய்வாய்போற்றி பிஞ்ஞகா போற்றியான் செய்
பாதகமனைத்துந்தீர்க்கும் பராபரா போற்றி போற்றி

அண்ணலேயெனை யாண்டுகொண்டருளியவமுதே
விண்ணிலேமறைந் தருள்புரி வேதநாயகனே
கண்ணி னாற்றிருக் கயிலையிலிருந்தநின் கோலம்
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்

ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனைமார்க் கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானேயென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமாதேவியார்

செறிதருமுயிர்தொறுந் திகழ்ந்துமன்னிய
மறுவறுமானிடமர பின்மேவியே
அறுவகைநெறிகளும் பிறவுமாக்கிய
இறைவிதன்மலரடி யிறைஞ்சியேத்துவாம்

மனிதருந்தேவருமாயா முனிவரும்வந்துசென்னி
குனிதருஞ்சேவடிக்கோமளமே கொன்றைவார்சடைமேற்
பனிதருந்திங்களும்பாம்பும் பகீரதியும்படைத்த
புனிதருநீயுமென்புந்தி யெந்நாளும்பொருந்துகவே

நின்றுமிருந்துங்கிடந்து நடந்துநினைப்பதுன்னை
என்றும் வணங்குவதுன்மலர்த்தா ளெழுதாமறையின்
ஒன்றுமரும்பொருளேயருளே யுமையேயிமையத்
தன்றும்பிறந்தவளேயழியா முத்தியானந்தமே.

பங்கயற்கண்ணரிய பரம்பரனுருவே
தனக்குரியவடிவமாகி
இங்கயற்கணகனுலக மெண்ணிறந்த
சராசரங்களீன்றுந் தாழாக்
கொங்கையற்கண்மலர் கூந்தற்குமரிபாண்
டியன்மகள் போற்கோலங்கொண்ட
அங்கையற்கணம்மையிருபாதம் போ
தெப்போதுமகத்துள் வைப்பாம்

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணியமேதென்னம் மேபுவியேழையும் பூத்தவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாபதி

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலி வேணியன்
அலகில்சோதியனம்பலத் தாடுவன்
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம்

ஆதியாய்நடுவுமாகியளவிலா வளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித் தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப் பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி

கற்பனைகடந்தசோதிகருணை யேயுருவமாகி
அற்புதக்கோலநீடியருமறைச் சிரத்தின்மேலாஞ்
சிற்பரவியோமமாகுந் திருச்சிற்றம்பலத்து ணின்று
பொற்புடனடஞ்செய்கின்ற பூங்கழல்போற்றி போற்றி

ஆரணங்கள்முடிந்த பதத்தானந்தவொளியுலகிற்
காரணங்கற்பனைகடந்த கருணைதிருவுருவாகிப்
பேரணங்கினுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்குமணிமாடத் திருச்சிற்றம்பலம்போற்றி

சீராரும்சதுர்மறையுந் தில்லைவாழந்தணரும்
பாராரும்புலிமுனியும் பதஞ்சலியுந்தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலாமீடேற
ஏராருமணிமன்றுளெடுத்த திருவடிபோற்றி

## சிவகாமியம்மையார்

மன்றின்மணிவிளக்கெனலாமருவு முகநகைபோற்றி
ஒன்றியமங்கலநாணினொளி போற்றியுலகும்பர்
சென்றுதொழவருள்சுரக்கும் சிவகாமசுந்தரிதன்
நின்றதிருநிலைபோற்றி நிலவுதிருவடி போற்றி

பரந்தெழுந்தசமண்முதலாம் பரசமயவிருணீங்கச்
சிரந்தழுவுசைவநெறித்திரு நீற்றினொளிவிளங்க
வரந்தைகெடப்புகலியர்கோன் முதுசெயத்திருமுலைப்பால்
சுரந்தளித்தசிவகாமசுந்தரி புங்கழல்போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்சணாமூர்த்தி

மும்மலம்வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த்தாணிமுலடங்குமுண்மையைக்
கைம்மலர்க்காட்சியிற் கதுவநல்கிய
செம்மலைபலதுளஞ் சிந்தியாதரோ.

கல்லாலின்புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற்கற்ற கேள்வி
வல்லார்கணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய்மறைக்கப் பாலாய்
எல்லாமாயல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற்சொன்னவரை நினையாம
னினைந்துபவத் தொடக்கைவெல்வாம்.

## சுப்பிரமணியக் கடவுள்

மூவிருமுகங்கள்போற்றி முகம்பொழிகருணைபோற்றி
ஏவருந்துதிக்கநின்ற ஈராறுதோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ்செவ்வேள் மலரடி போற்றியன்னான்
சேவலும்மயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி

அருவமுமுருவமாகியனாதியாய்ப் பலவாய்யொன்றாய்ப்
பிரமமாய்நின்றசோதிப் பிளம்பதோர்மேனியாகிக்
கருணைகூர்முகங்களாறுங்கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுருகன்வந்தாங் குதித்தனனுலகமுய்ய

மாயையின் வலியோனாகிமான் முதலோரைவென்றே
ஆயிரத்தோரெட்டண்டம் அரசுசெய்துகநூற்றெட்டுக்
காயமதழிவின்றாகிக்கடவுளர்க் கலக்கண்செய்த
தீயசூர்முதலைச்செற்றகுமரன்றாள் சென்னிவைப்பாம்

புன்னெறியதனிற்செல்லும் போக்கினைவிலக்கிமேலாம்
நன்னெறியொழுகச்செய்து நவையறுகாட்சிநல்கி
என்னையுமடியனாக்கியிருவினை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள்வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிருதடந்தோள்வாழ்க ஆறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்கக்குக்குடம்வாழ்கசெவ்வே
ளேறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்குவாழ்க
மாறிலாவள்ளிவாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

## வீரபத்திரக் கடவுள்

அடைந்தவி யுண்டிடுமமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர்வேதியர்
உடைந்திடமாமகமொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம

## வைரவக் கடவுள்

பரமனைமதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலைக்கிள்ளியே யொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங் கொண்டுதண்டமுன்
புரிதருவடுகனைப் போற்றிசெய்குவாம்

வெஞ்சினப்பரியழன் மீதுபோர்த்திடு
மஞ்சனப்புகையென வாலமாமெனச்
செஞ்சுடர்ப்படிவமேற் செறித்தமாமணிக்
கஞ்சுகக்கடவுள் பொற்கழல்களேத்துவாம்

## திருநந்தி தேவர்

ஐயிருபுராண நூலமலற்கோதியுஞ்
செய்யபன்மறைகளுந் தெரிந்துமாயையான்
மெய்யறுசூழ்புகல்வியா தனீட்டிய
கையெடுநந்திதன்கழல்கள் போற்றுவாம்

அங்கணன்கயிலைகாக்குமகம் படித்தொழின்மைபூண்டு
நங்குருமரபுக்கெல்லாமுதற் குருநாதனாகிப்
பங்கயத்துளவநாறும் வேத்திரப்படைபொறுத்த
செங்கைபம்பெருமானந்தி சீரடிக்கமலம் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண்டைவலவினையினாற் பாயுடுத்துழல்
குண்டரைவென்றுமுன் கூடல்வைகியே
வெண்டிருநீற்றெறி விளங்கச் செய்திடு
தண்டமிழ்விரகன் மெய்த்தாள்கள் போற்றுவாம

## திருநாவுக்கரசு நாயனார்

பொய்யுரை நூல்சிலபுகலுந்தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடலகத்திடு
வெய்யகற்றோணியாய் மிதப்பமேற்படு
துய்யசொல்லரசர்தா டொழுதுபோற்றுவாம்

## சுந்தரமூர்த்தி நாயனார்

வறந்திடுபொய்கை முன்னிரம்பமற்றவண்
உறைந்திடுமுதலைவந்து திப்பவன்னதால்
இறந்திடுமகன் வளர்ந்தெய்தப் பாடலொன்
றறைந்திடுசுந்தரனடிகள் போற்றுவாம்

## மாணிக்கவாசக சுவாமிகள்

கந்தமொடுயிர்படுங் கணபங்கமெனச்
சிந்தைகொள்சாக்கியர் தியங்கமூகராய்
முந்தொருமூகையை மொழிவித்தெந்தைபால்
வந்திடுமடி களைவணக்கஞ் செய்குவாம்

## அறுபத்து மூவர்

தத்துமூதெயின் மூன்றுந்தழலெழ
முத்துமூரன் முகிழ்த்தநிராமய
சித்துமூர்த்திதன் றாளிணைசேரறு
பத்துமூவர்பதமலர் போற்றுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேஸ்வரர்

பொன்னங்கடுக்கை முடிவேய்ந்த
புனிதறமைக்குபொருளன்றி
மின்னுங்கலனாடைகள் பிறவும்
வேறுதனக் கென்றமையாமே
மன்னுந்தலைவன் பூசனையில்
மல்கும்பயனை யடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளுந்
தூயோனடித்தாமரை தொழுவாம்

மனாதிகளுக் கெட்டாத பரமானந்த
வாழ்வினையங்கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனாதிதயந் தனினின்றுந் தாபித் தான்பால்
தழைத்தவன்பா லாட்டவந்த தடுக்கத் தாதை
எனாதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பினாகியருளடைந்தவிறற் சண்டே சன்றாள்
பிரசமல ரிறைதிறைஞ்சிப் பரசு வாமே.

## மகாவிஷ்ணு மூர்த்தி

சீதராவுமைசோதராவெம தீதராவர நாமதா
மோதராவன மாலைசூடு முகுந்தராச சகுந்தமூர்
நாதராவண னைக்கடிந்திடு நாரணாதழ னாறுகட்
காதராவணை மீதுகண்டுயில் கண்ணனேமணி வண்ணனே.

அச்சுதாமுக மச்சுதாகர னன்னகோதை யசோதைதன்
கசசுலாமுலை யுண்டுபண்டவன் கையணைத்துயில் கொண்டிடு
மெய்ச்சுதாபசு மைச்சுவாசக மென்மொழித்திரு நாயகா
நச்சுவாயர வுச்சிமீது நடித்திடும்பத நளினனே.

காயம்பூங் காயாமுன் காய்விளவிற் கன்றெறிந்த
நேயாமா யாவேயா னீள்புறவி னிரைகுவிக்கும்
ஆயாவல் லகிப்பாயா ஐவர்சகா யாபவள
வாயாபே யாவிமுலை மண்ணுண்ட மாதவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலரூபா மயிலையுருக் கொண்டநாதா கொடுங்கொலைக்குக்
காலரூபநிகர்நார கண்டீரவகச் சபரூபா
வால ரூபா கவின்றருவா மனவாண் மழுக்கொள் வரராமா
நில ரூபந்தருராமா நிலவு வெள்ளை நிறராமா.

## துர்க்கை

கொழுதிசை யளிமுரலுந் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கை போல
மழையுறநிந் திருமேனி மணிவண்ண
னிதய மலர் வைகு மானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே
கரகமல முகிழ்த்தெந் நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
வருள் கொழிக்குங் கமலக் கண்ணாய்.

செங்கமலப் பொலந்தாதிற் நிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருடுரக்கு மலர்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா.

## இலக்குமி துதி

கமலை திருமறுமார்பன் மனைக்கிழத்தி
செங்கமலக் கையாய் செய்ய
சிமலை பசுங்கழை குழைக்கும் வேனிலான்
தனையீன்ற விந்தை தூய
அமுத கும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமிரம் அகன்றிட ஒளிரும் செழுஞ்சுடரே
எனத் துதிப்போர் சிந்தை சேர்வோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்ம சக்தி சாந்தி சக்தி ஓம்சிவம்
சச்சி தானந் தாத்ம சக்தி சர்வ சக்தி ஓம்சிவம் (சுத்த)

வேதசாஸ்திர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சுத்த)

நாதகீத காகனலா நடனசக்தி ஓம்சிவம்
மகாமந்த்ர யந்த்ர தந்த்ர வஸியசக்தி ஓம்சிவம் (சுத்த)

யோகபோக தியாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோக சோகரகித தபோசக்தி ஓம்சிவம் (சுத்த)

துஷ்டசத்ரு நாகசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலட்சுமி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்த)

குஞ்சிதபத அபயஸ்ரீஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஸ்ரீரஸ்ரீரநட ராஜசுத்த சக்தி ஓம் (சுத்த)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி
# சகலகலாவல்லி மாலை

*திருச்சிற்றம்பலம்*

வெண்தா மரைக்கன்றி நின் பதந்
 தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
 சக மேழு மளித்து
உண்டா னுறங்க வொழித்தான்
 பித்தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
 சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
 தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
 பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
 கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
 சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
 ஆர்ந்துன் னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
 உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
 கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
 சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
 கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
 வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
 தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
 சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்து
அஞ்சத் துவச முயர்ந்தோன்
செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த
நல்காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்
நல்காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமு மவதானமும்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலமும்
சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத்தாயே
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடி
உண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே!

தாவறுமுலகெலாந்தந்த நான்முகத்
தேவுதன்றுணைவியாச் செறிந்தபல்லுயிர்
பூவுதொறிருந்திடு நலங்கொள்வாணிதன்
நாவடிமுடிமிசைப்புனைந்து போற்றுவாம்.

பழுதகன்றநால்வகைச் சொன்மலரெடுத்துப்
பத்திபடப்பரப் பித்திக்கு
முழுதகன்றுமணந்து சுவையொழுகியணி
பெறமுக்கண் மூர்த்திதாளில்
தொழுதகன்றவன் பெனுநார்தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந்தேனுங்
கொழுதகன்றவெண்டோட்டுமுண்டகத்தா
ளடிமுடிமேற்கொண்டு வாழ்வாம்.

வெண்மலரும்வெண்பணியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்துவாச
வெண்மலரின் வீற்றிருந்து பழங்கருணை
பூத்துவண்டு விளரிபாடக்
கண்மலருமாயிரத் தோடவிழ்த்துமுகை
நெகழ்த்தகமலத் தில்வாழெண்
கண்மலருஞ்சதுர்முகத்தோனாவில்வளர்
வாணிபதங்கருத்துள் வைப்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிபகவான்

கருநிறம் படைத்தாய் போற்றி காளமுண் டிருண்ட கண்டத்
தொருவனே நிகர்ப்பாய் போற்றி ஊனகன் றுலர்ந்த யாக்கைத்
திருமலிசெல்வ போற்றி செறிசடைக் கற்றையோடு
வருமுகத்துரோமந் தாங்கி மன்னிய தெய்வம் போற்றி.

வேலவனை வேங்கைமர மாக்கி வைத்தாய்
விறகுகட்டுச் சொக்கர்தமை விற்க வைத்தாய்
மாலவனை யுரலோடு கட்டு வித்தாய்
வள்ளிதனைக் குறவரதுவனத்தில் வைத்தாய்
காலனைமார்க் கண்டனுக்கா வரனுதைத்த
காரணமு நீபிடித்த கருமத் தாலே
சாலவுனை யான்தொழுதே னெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பி ரானே

## சேக்கிழார் நாயனார்

தூக்குசீர்த்திருத் தொண்டத்தொகைவிரி
வாக்கினாற்சொல்லவல்ல பிரானெங்கள்
பாக்கியப்பயனாய்ப் பதிகுன்றைவாழ்
சேக்கிழானடி சென்னியிருத்துவாம்.

*திருச்சிற்றம்பலம்*

சுபம் சுபம் சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஆறுமுகக் கடவுள் துதி
(திருவருணை)

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

## விநாயகர் துதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் மனிதடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியர் துதி

தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன தனதான

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்துக்கொரு வித்துக்குருபரனெனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரருமடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப்பொழுதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாக
பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே
தித்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கா டிக்கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி வட்டகலை கொடு
சித்தரப்பவுரிக்குத்தி குதிகு
திக்குத்திகு திக்குத் திரி கட மென வோதுங்
கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப் பொரவல பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பரங்குன்றம்

தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்தத்தனந்த தனதான

கருவடைந்து பத்துற்றதிங்கள்
வயிறிருந்து முற்றிப்பயின்று
கடையில்வந்து தித்துக்குழந்தை வடிவாகி
கழுவியங்கெ டுத்துச்சுரந்த
முலையருந்தி விக்கிக்கிடந்து
கதறியங்கை கொட்டித்தவழ்ந்து நடமாடி
அரைவடங்கள் கட்டிச்சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டிதண்டை
அவையணிந்து முற்றிக்கிளர்ந்து வயதேறி
அரியபெண்கள் நட்பைப்புணர்ந்து
பிணியுழன்று சுற்றித்திரிந்த
தமியனுனக்கரு பைச்சித்தமென்று பெறுவேனோ
இரவியிந்தரன் வெற்றிக்குரங்கி
னரசரென்று மொப்பற்றவுந்தி
யிறைவனெண்கி னக்கர்த்தனென்றும் நெடுநீலன்
எரியதென்றும் ருத்ரற்சிறந்த
அனுமனென்றும் ஒப்பற்றவண்டர்
எவருமிந்த வர்க்கத்தில்வந்து புனமேவ
அரியதன்ப டைக்கர்த்தரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டைவென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்றபண்பின் மருகோனே
அயனையும்பு டைத்துச் சினந்து
உலகமும் படைத்துப் பரிந்துள்
அருள்பரங்கி ரிக்குட்சிறந்த பெருமாளே.

## திருச்செந்தூர்

தனனா தனந்த தனதான

வரியார் கருங்கண் மடமாதர்
மகவாசை தொந்த மதுவாகி
இருபோது நைந்து மெலியாதே
இருதாளி னன்பு தருவாயே
பரிபால னஞ்செய் தருள்வோனே
பரமேசுரன்ற னருள்பாலா
அரிகேச வன்றன் மருகோனே
அலைவா யமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவினன்குடி
## (பழநி)

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த தனதான

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமல்நின்று
அறுசமய நீதியொன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலை வாசல்நின்று
அனுதினமு நாணமின்றி அழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்கர்
உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதிநின்ற பெருமாளே

தான தந்தன தானான தானன
தான தந்தன தானான தானன
தான தந்தன தானான தானன தனதான
நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாமசம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முனாளினில்
ஆடல் வெம்பரிமீதேறி மாகயிலையிலேகி
ஆதியந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

## திருவேரகம்

### (சுவாமிமலை)

தனதனன தானதந்த தனதனன தானதந்த
தனதனன தானதந்த தனதான

சரணகமலா லயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ
கருணையுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுநீள் சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகர்கோயில்
(பழமுதிர் சோலை)

காரணமி தாக வந்து புவிமீதே
காலனணு காதிசைந்த கதிகாண
நாரணனு வேதன்முன்பு தெரியாத
ஞானநட மேபுரிந்து வருவாயே
ஆரமுதமான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே.

## கயிலைமலை

தனனதனத் தனதான தனனதனத் தனதோன

புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாளத் தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே.

## திருத்தணிகை

தனத்த தத்தத்னத் தனதான

நினைத்த தெட்டனையிற் றவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமற்
கனத்த தத்துவமுற் றழியாமற்
கதித்த நித்தியசித் தருள்வாயே
மனித்தர் பக்தர்தமக் கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே
செனித்த புத்திரரிற் சிறியோனே
திருத்த ணிப்பதியிற் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிராப்பள்ளி

தனதனனத் தனதான

பகலிரவினிற் றடுமாறா
பதிகுருவெனத் தெளிபோத
ரகசியமுரைத் தநுபூதி
ரதநிலைதனைத் தருவாயே
இகபரமதற் கிறையோனே
இயலிசைமுத் தமிழோனே
சகசிரகிரிப் பதிவேளே
சரவணபவப் பெருமாளே

## வள்ளியூர்

தைய தானன தனதான தைய தானன தனதான

அல்லில் நேருமின் னதுதானு மல்ல தாகிய வுடல்மாயை
கல்லி னேரஅ வழிதோறுங் கையும் நானுமு லையலாமோ
சொல்லி நேர்படு முதுசூரர் தொய்ய வூர்கெட விடும் வேலா
வல்லி மாரிரு புறமாக வள்ளி யூருறை பெருமாளே.

## கதிர்காமம்

தானதன தானத் தனதான
தானதன தானத் தனதான

மாதர்வச மாயுற் றுழல்வாறும்
மாதவமெணாமற்றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக்குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு வருணை

தான தத்த தான தனா தனாதன
தான தத்த தான தனா தனாதன
தான தத்த தான தனா தனாதன தனதான

சீர்சி றக்குமேனி பசேல் பசேலென
நூபு ரத்தினோசை கலீர் கலீரென
சேர விட்ட தாள்கள் செவேல் செவேலென வருமானார்

சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்
நூறு லக்ஷகோடி மயால் மயால்கொடு
தேடி யொக்க வாடி யையோ வையோ வெனமடமாதர்

மார்ப டைத்த கோடு பளீர்பளீரென
ஏய லித்தெனாவி பகீர்பகீரென
மாம சக்கி லாசை யுளோ முளோமென நினைவோடி
வாடை பற்று வேளை அடாஅடா வென
நீம யக்க மேது சொலாய் சொலாயென
வாரம் வைத்த பாத மிதோ விதோவென அருள்வாயே

பார தத்தை மேரு வெளீ வெளீதிகழ்
கோடொடித்த நாளில் வரைஇ வரைஇபவர்
பானிறக்க ணேசர் குவா குவாகனர் இளையோனே

பாடன் முக்ய மாது தமீழ்தமீழிறை
மாமு நிக்கு காதிலுணார்லுணார்விடு
பாசமற்ற வேத குரு குருபர குமரேசா

போர்மி குத்த சூரன் விடோம் விடோமென
நேரெ திர்க்க வேலை படீர் படீரென
போய றுத்தபோது குபீர் குபீரென வெகுசோரி

பூமி யுக்க வீசு குகா குகா திகழ்
சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வானைதொள்
பூணியிச்சை யாறு புயாபுயாறுள பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு திருப்பதி

ஈன மிகுத் துளபிறவி யணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞான வருட் டனையருளி வினைதீர
நாணமகள றியகருணை புரிவாயே
தான தவத் தினின் மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆன திருப் பதிகமரு ளிளையோனே
ஆறுதிருப்பதியில்வளர் பெருமாளே

## திருமொழி

வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தால்
பெருந்துயரிடும் பையில்பிறந்து
கூடினேன்கூடி இளையவர்தம்மோடு
அவர்தரும்கல வியேகருதி
ஓடினேன்ஓடிஉவப்ப தோர்பொருளால்
உணர்வெனும் பெரும்பதம்தெரிந்து
நாடினேன் நாடிநான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லைகான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானும் தானா யொளிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும்
அமுதுமாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற வொன்றை யுணர்ந்தேனே

பச்சைமா மலைபோல்மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தேன் உன்னைக் காண்பதோராசையினால்
வேயேம்பூம்பொழிசூழ்விரையார் திருவேங்கடவா
நாயேன்வந்து அடைந்தேன்நல்கி ஆளென்னைக்கொண்டருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

நடுவுநின்றார்க்கன்றி ஞானமுமில்லை
நடுவுநின்றார்க்கு நரகமுமில்லை
நடுவுநின்றார்நல்ல தேவருமாவார்
நடுவுநின்றார்வழி நானுநின்றேனே

அன்புஞ்சிவமு மிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாரு மறிகிலார்
அன்பேசிவமாவதா ருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந் திருப்பாரே

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

சிவனோ டொக்குந் தெய்வந் தேடினுமில்லை
யவனோ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனங்கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயறுகு
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

அரகர வென்ன வரியதொன் றில்லை
யரகர வென்ன வறிகிலர் மாந்த
ரரகர வென்ன வமரரு மாவ
ரரகர வென்ன வறும்பிறப் பன்றே

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை யங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தர்செய் தீசன் அருள்பெற லாமே.

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரானென்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரானென்று
நாடுவன் நானின் றறிவதுதானே.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராந் திருமுறை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒரு கைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

சிந்தனை செய்ய மனமமைத்
தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்
தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற்
கிவையான் விதித்தனவே

பொய்யா நரகம் புகினுந்
துறக்கினும் போந்து புக்கிங்
குய்யா வுடம்பினோடுர்வ
நடப்ப பறப்பவென்று
நையா விளியினு நானில
மாளினு நான்மறைசேர்
மையார் மிடற்ற னடிமற
வாவரம் வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமலிங்க சுவாமி பாடல்

துதிபெறு கணபதியிணையடி மலரும்
பதிதரு சரவண பவன்மல ரடியுங்
கதிதரு பரசிவ னிவலணி கழலும்
மதியுற மனனிடை மருவுது மிகவே

கலிநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவனி னிணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலைவறு மொருபரை சரணஞ் சரணம்
உமைசிவை யம்பிகை சரணஞ் சரணம்

படமுடியா தனித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீ யெடுத்துக் கொண்டுன்
உடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறுசிற் றபம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியேயென் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யா னொருவனன் றோவனையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ
இதுதகுமோ இது முறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொது நடஞ் செய் வள்ளால்யா னுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்தந்தை யலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருணின் னருளொளியை கொடுத்தருளிப்பொழுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமாட்டேன் துயர்சிறிதும படமாட்டே னினிநான்
பயப்படவு மாட்டேனும் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டேன் ஏமாந்து விடமாட்டேன் கண்டீர்மெய்ம்
மையிது நும்மாணை விளம்பினனும் மடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவுமாட்டேன்
கிளரொளியம் பலத்தாடல் வளரொளிநும் மல்லால்
நடமாட்டேன் என்னுளத்தேனான் சாகமாட்டேன்
நல்ல திருவருளாலேநான்றா னானேனே

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
யுகந்ததண்ணீரிடை மலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
யாடையிலே யெணைமணந்த மணவாளா பொதுவி
லாடுகின்ற வரசேயென் னலங்கனிந்தருளே

கல்லார்க்குங் கற்றவர்க்குங்களிப் பருளுங்களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவி நடன மிடுகின்ற சிவமே
என்னரசேயான்புகலு மிசையு மணிந்தருளே

ஒருமையுடனின துதிருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும்
பெருமை பெறுநினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுகவேண்டும் மதமான பேய்
பிடியா திருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவுபெண்ணாசையை மறக்கவே வேண்டு முனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வுநான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில்கந்த கோட்டத் துள்வளர்
தலமோங்குகந்த வேளே
தண்முகத்துய்யமணியுண் முகச்சைவமணி
சண்முகத் தெய்வமணியே

உருவாகி யுருவினுள் ளுருவமாகி
உருவத்திலுருவமாகி யுருவுள் ளொன்றாய்
அருவாகி யருவினிலுள் ளருவாமாகி
அருவத்தி லருவமாகி யருவுள் ளொன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்
குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லியாகி
மகத்துவமா யணுத்துவமாய் வயங்குந் தேவே.

கற்பதுங் கேட்பது மெல்லா நின் னற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதங்காணும் பொருட்டென வெண்ணுவர் புண்ணியரே
சொற்பத மாயவைக் கற்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதஞ்சேரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே
பாடற்கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந்தளிக்குங்
கூடற்கினிய வடியவர்தங் கூட்டமளிக்குங் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே நீயஞ்சே லென்மே லாணைகண்டாய்
தேடற் கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென்றிடுநீறே

அருட்சோதி தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற வானந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம்போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தந் தெய்வம்
இருட்பாடு நிக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணிவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடலுவந் தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தறியேன் மணியறியேன் மந்திர மொன்றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழக்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியே னறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலோரிடத்தே
இருந்தறியே னறிந்தோரை யேத்திடவுமறியேன்
எந்தைபிரான் மணிமன்ற மெய்தவறி வேனோ
இருந்ததிசை சொலவறியே னெங்ஙனனான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறித் திலனே

தனித்தனிமுக் கனிபிழிந்து வடிதொன்றாக் கூட்டிச்
சக்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டினிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந்தெள்ளமுதே
அநித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே.

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துளுணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத்தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும் இனித்தசுவைக்கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனித்தநறுங் கனியே
மெய்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங்கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே

பாலென் பதுமொழி பஞ்சென்
பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற
நீசெந்திலோன்றிருக்கை
வேலென் கிலைகொற்றமயூர
மென்கிலைவெட் சித்தண்டைக்
காலென்கிலைமன மேயெங்ங
னேமுத்தி காண்பதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமான சுவாமி பாடல்

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்த தெதுதன்னருள் வெளிக்குளே
அகிலாண்டகோடியெல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல்நின்ற தெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந் தெய்வமென்
றெங்குந் தொடர்ந் தெதிர்வழக்கிடவு நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொருசித்தாகியின் பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பகலறநின்ற வெல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டவெலாமொனவுரு வெளியதாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

ஆழாழிகரையின் றிநிற்கவிலையோ கொடிய
ஆலமுமமுதாக விலையோ
அக்கனல் மீதுவடவனனிற் கவில்லையோ
அந்தரத் தகிலகோடி
தாழாமனிலை நிற்கவில்லை யோமேருவுந்
தனுவாகவளையவிலையோ
சத்தமேகங்களும் வச்ரதரனாணையிற்
சஞ்சரித் திடவில்லையோ
வாழாது வாழவேயிராமனடியாற் சிலையு
மடமங்கையாக விலையோ
மணிமந்தரமாதியால் வேண்டு சித்திகளுலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழானவென்மனங்குவிய வொருதந்திரம்
பண்ணுவதுனக் கருமையோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே.

எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதா
னியாதினுமரி தரிதுகாண்
இப்பிறவிதப்பினாலெப் பிறவிவாய்க்குமோ
வேதுவருமோவறிகிலேன்
கண்ணகனிலத்துநானுள்ள பொழுதேயருட்
ககனவட்ட த்தினின்று
காலூன்றிநின்று பொழியானந்தமுகிலொடு
கலந்துமதிய வசமுறவே
பண்ணுவதுநன்மையிந் நிலைபதியுமட்டுமே
பதியாயிருந்த தேகப்
பவுரிகுலையாமலே கௌரிகுண்டலியாயி
பண்ணவித னருளினாலே
விண்ணிலவுமதியமுத மொழியாதுபொழியவே
வேண்டுவேனு மதடிமைநான்
வேதாந்தசித்தாந்தசமரச நன்னிலைபெற்ற
வித்தகர்சித்தர் கணமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

அன்ன விசாரம் அதுவே விசாரம் அது ஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா விசாரம் நற்தோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய் இறைவா? கச்சி யேகம்பனே!

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையால்
எண்ணுண்டுசாத்த எதிர்நிற்கஈசன் இருக்கையிலே
மண்ணுண்டுபோகுதை யோகெடு வீரிந்த மானிடமே.

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்றுவஞ்சக நாவொன்றுபேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்க விரும்புமியான்
செய்கின்றபூசையெவ் வாறுகொள் வாய்வினைதீர்த்தவனே

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும். தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே!

சொல்லால் வரும்குற்றம் சிந்தனையால் வரும் தோடம் செய்த
பொல்லாத தீவினை பார்வையில் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிருந் தீங்குகள் ஆயவும் மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்! கச்சி ஏகம்பனே!

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேன் உடல் வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றில் ஈசர் உயிர்த்துணை நின்பதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடாமற்பாழுக் குழையாமலோர முரைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சில்
நாடாமனன்மைவழு வாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானு மிங்கொன்றொடொன்றை
மூட்டுவிப்பானுமுயங்கு விப்பானு முயன்றவினை
காட்டுவிப்பானுமிருவினை பாசக்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானுமொருவனுண்டே தில்லையம்பலத்தே

பிறவாதிருக்கவரம் பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார்புகழ் தில்லையம்பல வாணரடிக்கமல
மறவாதிருமனமேயது காண்மருந் துனக்கே

எரியெனக் கென்னும்புழுவோவெனக் கெனுமிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோவெனக்கெனுந் தான் புசிக்க
நரியெனக் கென்னும்புன்னாயெனக் கெனுமிந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேனிதனாலென்ன பேறெனக்கே

நல்லாரிணக்க முநின்பூசைநேசமு ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோவகமும் பொருளும்
இல்லாளுஞ்சுற்ற முமைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம்வெளிமயக் கேயிறைவாகச் சியேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப முனிவர் அருளிய

# காரிய சித்தி மாலை

திருச்சிற்றம்பலம்

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி ருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத்தொழுகின்றோம்

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகில் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலகமுதலை கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீழும் பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க்கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி ஆகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப் படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுவிப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

மண்ணில் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்திகளில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்

திங்கள் இரண்டும் தினந்தோறும்
திகழ ஒருபான் முறைஓதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத்து ஒருமுறைமை
பொங்கு உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
தூங்க வெறுக்கை முதல் பலவும்
தோன்றும் எனச் செப்பினர் மறைந்தார்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணு மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்பதம் நின்ற கற்பகக்களிறே!
முப்பழநுகரு மூஷிகவாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளி
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலக்கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்ஷமமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டும் ஒன்றிடமென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போ நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக்காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹணபவச ரரரர ரரர
ரிஹணபவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன்நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணிபூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொகமொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வாரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச்செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்து டை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கக் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்ட துவோ டப்
புலியு நரியும் போர்தொரு நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பங்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன்படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ளன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் னீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டத்திக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரஹ தோஷம் நீங்க

### ஞாயிறு

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

### திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி

### வியாழன்

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருள்வாய்

### வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி

சங்கடம் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா

ராகு

அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி.

கேது

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுதேவே கேண்மையாய் ரக்ஷ.

இந்த நவக்ரக ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எனது வாழ்க்கைத் துணைவியின் தாயாரும் எனது அன்பிற்குரிய மாமியாரும், அமரர் திரு விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியுமான அமரர் திருமதி.விநாயகமூர்த்தி தங்கமுத்து அவர்களின் வாழ்வின் இறுதிப்பயணத்திற்கு அஞ்சலி செய்து விடைகூறி வழியனுப்ப வருகைதந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் முதற்கண் எமது குடும்பத்தவர்கள் அனைவரினதும் சார்பில் நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.
பிறக்கின்ற போதே இறக்கின்ற சேதி இருக்கின்தென்பது மெய்தானே, பேதை மனிதனே உடம்பு என்பது கனவுகள் தாங்கும் பைதானே, இவ்வாறு மனித வாழ்பற்றி பாடல் ஒன்று விபரிக்கின்றது. இதிலிருந்து மனிதர்களாகிய நாம் எவரும் விதிவலக்கானவர்கள் அல்ல என்பது வரலாறு கூறுகின்ற மாபெரும் உண்மையகும்.

எனது மாமியார் அவர்கள் அவரது மக்களுடன் மட்டுமன்றி, மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள் அனைவர் மீதும் அளவிலா அன்பு செலுத்திய வாழ்க்கையினை வாழ்ந்துவிட்டு அனைவரையும் கண்ணீர் சிந்தவைத்து இவ்வுலகினை விட்டே பயணமாகிவிட்டார். இந்நிலையில் அன்னாரின் பூதவுடலை நேரடியாகவே பார்வையிட்டு தத்தமது அனுதாபத்தினை தெரிவித்த உறவுகள் தவிர அன்னாருடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்த தாயகத்தில் வாழும் உறவுகளும், அன்னாரின் வாரிசுகளும் மேற்படி நிகழ்வினை தாயகத்திலிருந்து நேரடியாகவே (Skype) தொழில் நுட்ப சாதனத்தின் மூலம் காண்பதற்காக திருமதி. ராஜேராஜேஸ்வரியின் சகோதரியின் இல்லத்திற்கு வருகைதந்திருந்த தினம் வருகைதந்திருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியினை நகல்வதுடன் உங்களது சார்பிலும் அன்னாருக்கு மீண்டும் ஆழ்ந்த அஞ்சலியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்

குமாரதுரை குடும்பத்தினரும், பிள்ளைகளும், மருமக்களும்,
பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைபளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Printed by Maruthy Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org